விலை ரூபா: 6.00

பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

English Academy
210, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
மின் அஞ்சல் — thangan 672002 @ yahoo.com
உங்கள் பிள்ளைகளுக்கு
சிறந்த இடம்
Better Place
for your children


வலம்புரி

VALAMPURI

சங்கு 04 | வள்ளுவர் ஆண்டு 2034 | மாசி 25 ஞாயிற்றுக்கிழமை (09.03.2003) | தொலைபேசி~ 2223378 | ஒலி 80

# சமாதானப் பேச்சுக்களில் முஸ்லிம்கள் தனித்தரப்பா?

## அரசும் புலிகளுமே தீர்மானிக்க வேண்டும்
## நோர்வேத் தூதுவர் எரிக்சோல் பேட்டி



(மட்டக்களப்பு)

**முஸ்லிம் மக்களின் அபிலாசைகளுக்கு ஏற்ப முக்கிய முடிவுகள் குறித்து ஆலோசிக்கும் போது முழு அளவிலான முஸ்லிம் குழு பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளலாம் என இரு தரப்பினரும் ஏற்றுக் கொண்டுள்ள போதும், அக் குழுவினர் தனித்தரப்பாக கலந்து கொள்வது தொடர்பாக அரசும், விடுதலைப் புலிகளுமே முடிவுகளை எடுக்க வேண்டுமென நோர்வேயின் தூதுவர் எரிக்சோல் ஹெய்ம் தெரிவித்துள்ளார்.**

கனடாவில் இருந்து வெளிவரும் செய்தி ஊடகம் ஒன்றிற்கு அளித்த விஷேட பேட்டி ஒன்றிலேயே நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக் சோல்ஹெய்ம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அப் பேட்டியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் பேசி எடுக்கும் முடிவுகளுக்கு அமைவாக நோர்வே சமாதான ஏற்பாட்டாளர்கள் நிலையில் இருந்து தனது பங்களிப்பை செய்யும். முஸ்லிம் மக்களுடன் தொடர்புடைய விடயங்கள் பேசப்படும் போது முழு அளவிலான முஸ்லிம் குழுவுடன் அவ் விடயத்தை ஆராய்வதற்கு இரு தரப்பினரும் இணங்கியுள்ளனர்.

நோர்வேயைப் பொறுத்தவரை இலங்கைக்கு தூரத்தில் இருக்கும் ஒரு சிறிய தேசம். எங்களிடம் இராணுவபலம் இல்லை. இலங்கையின் பொருளாதாரத்தில் எதுவித ஆர்வமும் இல்லை. மத்திய கிழக்கு சமாதான முயற்சிகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த எம்மை, அரசும் விடுதலைப் புலிகளுமே சமாதான ஏற்பாட்டாளராக செயற்படுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர். நாமும் செயற்பட்டு இரு தரப்பினரையும் பேச்சுவார்த்தை மேசைக்கு கொண்டு வந்துள்ளோம்.

இரு தரப்பு சமாதான பேச்சாளர்களான கலாநிதி அன்ரன் பாலசிங்கம், பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் ஆகியோருக்கிடையில் நல்ல நம்பிக்கை அடிப்படை உள்ளது.

தற்போது மிக முக்கிய விடயமாக இலங்கையில் உள்ள அனைத்து மக்களும் சமாதானத்தின் அனுகூலங்களை அனுபவிக்க வேண்டும். பொருளாதாரம் மற்றும் சமாதான விடயங்கள் பேச்சுக்களில் தொடங்கவிருக்கின்றன. இதுவரை மிக குறைந்த விடயங்களே இயல்பாக மாறியுள்ளன.

(3ம் பக்கம் பார்க்க)

# வடக்கு கிழக்கு அபிவிருத்திக்கு 8,861 மி. ரூ. ஒதுக்க இணக்கம்

(நமது நிருபர்)

வடக்குக் கிழக்கு பிரதேசங்களில் உள்ள 8 மாவட்டங்களின் 477 அபிவிருத்தித் திட்டங்களுக்கும் உடனடி மனிதாபிமானத் தேவைக்கும் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கும் 8,861 மில்லியன் ரூபாய்கள் தேவையென மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த அவசர மனிதாபிமான நடவடிக்கைகளுக்குத் தேவையான இந் நிதி தொடர்பாக அரசும் விடுதலைப் புலிகளும் இணக்கம் கண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட ரீதியாக ஒதுக்கப்படவுள்ள நிதி விபரம் வருமாறு;

கிளிநொச்சி மாவட்டத்தில் இனம் காணப்பட்டுள்ள 50 திட்டங்களை மேற்கொள்ள 2,766 மில்லியன் ரூபாவும்,

மன்னார் மாவட்டத்திற்கு இனம் காணப்பட்டுள்ள 8திட்டங்களை மேற்கொள்ள 595 மில்லியன் ரூபாவும்,

யாழ்ப்பாண மாவட்டத்தில் இனம் காணப்பட்டுள்ள 65 திட்டங்களை மேற்கொள்ள 1,109 மில்லியன் ரூபாவும்,

முல்லைத்தீவு மாவட்டத்தில் இனம் காணப்பட்ட 13 திட்டங்களை மேற்கொள்ள 1,459 மில்லியன் ரூபாவும்,

வவுனியா மாவட்டத்தில் இனம்

(10ம் பக்கம் பார்க்க)

# கைதிகளுக்கு ஆதரவாக யாழ். செயலகம் முன்பாக நாளை மறியல் போர்!

(யாழ்ப்பாணம்)

களுத்துறை சிறைக் கைதிகளின் உண்ணா விரதப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தும், அவர்களின் விடுதலையை அரசாங்கம் விரைவு படுத்த வேண்டுமென்று வலியுறுத்தியும், நாளை முற்பகல் 10.30 மணிமுதல் 11.30 மணிவரை யாழ் அரச செயலகம் முன்பாக அடையாள மறியற் போராட்டம் நடைபெறவுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களும், யாழ் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியமும் இணைந்து இப் போராட்டத்தை நடத்த திட்டமிட்டுள்ளன.

போராட்டத்திற்கு ஆதரவு வழங்கும் வகையில் அனைத்துப் பொது அமைப்புக்களைச் சேர்ந்தவர்களையும், பொது மக்களையும் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

(இ)

# 6 புலிப் போராளிகள் நாளை விடுதலை

(திருகோணமலை)

திருகோணமலையில் கடற்படையினரால் கடந்த நவம்பர் மாதம்கைது செய்யப்பட்ட 6 விடுதலைப்புலிப் போராளிகளும் நாளை திங்கட்கிழமை விடுவிக்கப்படுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

கைதுசெய்யப்பட்ட 6 புலிப் போராளிகள் மீதான பிணை மனு விசாரணை கொழும்பு உயர் நீதிமன்றில் நாளை

(10ம் பக்கம் பார்க்க)

# பாதுகாப்பு வழங்க ஜனாதிபதி கோரிக்கை

(கொழும்பு)

நாளை 10ம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ள ஆர்ப்பாட்டப் பேரணி, மற்றும் கண்டனக் கூட்டம் ஆகியவற்றைக் குழப்பி, இனக் கலவரத்தை ஏற்படுத்த சில தீயசக்திகள் நடவடிக்கை எடுத்து வருவதாகவும், அதனைத் தடுக்க உடன் நடவடிக்கை எடுக்குமாறும், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவிற்கு அவசர கடிதமொன்றை நேற்று அனுப்பி வைத்துள்ளார்.

(வ)

அன்பு வாசகர்களே!
நாளை உங்களின்
சங்கு நாதம்
விஷேட அரசியல்
கட்டுரையுடன்
விலை ரூபா 12/-

# ஆசிய அபிவிருத்தி வங்கி உதவி வடக்கு கிழக்கு மட்டுமன்றி நாட்டின் சகல பகுதிகளையும் சென்றடைய வேண்டும்

## செய்தியாளர் மத்தியில் உலக வங்கித் தலைவர்

(கொழும்பு)

இலங்கையில தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதான முயற்சிகளினால் ஏற்படக்கூடிய பலாபலன்கள் வடக்குக் கிழக்குப பிரதேசங்களுக்கு மாத்திரமல்ல, முழு இலங்கையையும் சென்றடைய வேண்டுமென்று ஆசிய அபிவிருத்தி வங்கித் தலைவர் ரடோ சினோ தெரிவித்துள்ளார்.

நான்கு நாள் உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டு இலங்கை வந்திருந்த அவர் வடக்குக் கிழக்கு உட்பட பல பிரதேசங்களுக்குச் சென்று அங்குள்ள நிலைமைகளை ஆராய்ந்து விட்டு நாடு திரும்பு முன்பு நேற்று கொழும்பில் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், இலங்கையில் தற்போது மேற் கொள்ளப்பட்டு வரும் சமாதான முயற்சியில் அரசும் விடுதலைப் புலிகளும் மேற்கொண்டுள்ள உறுதிப்பாடு, அர்ப்பணிப்பு என்பவற்றிலும்,சர்வதேச சமூகத்தின் சமாதான முயற்சி மீதான பார்வையிலுமே ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவிகளை அதிகரிப்பது பற்றி உலக வங்கி பரிசீலித்து வருகின்றது.

சமாதானத்தை அடையும் வரை காத்திராது சமகாலத்தில் இந்த உதவிகளை வழங்கவேண்டிய தேவைகள் உள்ளது.சமாதானத்தின் பயனை வடக்குக் கிழக்குடன் மட்டுப்படுத்தாமல் நாட்டின்

(10ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்




# CRICKET WORLD CUP 2003







## இந்தியாவுடனான ஆட்டத்தில் ஜெயசூரியா விளையாடுவார்?

உலகக் கிண்ணப் போட்டித் தொடரில் எதிர்வரும் திங்கட்கிழமை இந்தியா வுடனான போட்டியில் இலங்கை அணியின் தலைவர் சனத் ஜெயசூரியா விளையாடுவார் என்று இலங்கை அணியின் பயிற்றுவிப் பாளர் டேவ் வொர்மூர் தெரிவித்துள்ளார். அவுஸ்திரேலி யாவுடன் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் சனத் ஜெயசூரியா துடுப்பெடுத்தாடிக் கொண்டிருந்த போது வேகப் பந்து வீச்சாளர் பிரட்லீ வீசிய வேகமான பந்துஅவரின் இடது முன்கையில் பட்டதால் காயம் ஏற்பட்டது. அவர் தொடர்ந்து ஆடமுடியாது வெளியேறினார்.

எனினும் அவருக்கு எலும்பு முறிவு ஏற்படவில்லையென மருத்துவ சோதனைகளில் கண்டு பிடிக்கப்பட்டதாக தெரிவிக் கப்படுகின்றது.

## சர்வதேச போட்டிகளிலிருந்து டொனால்ட ஓய்வு

சர்வதேச கிரிக்கெற் ஆட்டங் களில் இருந்து ஓய்வு பெறப் போவதாக தென்னாபிரிக்காவின் வேகப் பந்துவீச்சாளர் டொனால்ட் நேற்று தெரிவித்துள்ளார். நியூசிலாந்திற்கும் சிம்பாப்வேக்கும் இடையில் நேற்று நடைபெற்ற போட்டியின் மதிய போசன இடைவேளையின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தற்போது நடைபெற்றுவரும் 8வது உலகக் கிண்ணப் போட்டி களில் தென்னாபிரிக்கா விளையா டிய ஆறு முதற் சுற்றுப் போட்டிகளில் மூன்றில் மட்டுமே இவர் விளையாடியுள்ளார். இப் போட்டிகளில் 133 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டை மாத்திரமே கைப்பற்றியுள்ளார். 36 வயதான அலன் டொனால்ட் 72 டெஸ்ட் போட்டிகளில் 330 விக்கெட்டுகளை கைப்பற்றியதுடன் ஒரு நாள் சர்வதேசப் போட்டிகளில் 272 விக்கெட்டுகளைக் கைப்பற்றி யுள்ளார். (த-5)

## பயிற்சியின் போது மியுலனுக்கு காயம்

சிம்பாப்வே அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் மார்க்வே மியுலன் பயிற்சியின் போது காயமடைந்த தால் நேற்றைய நியூசிலாந்து அணியுடனான போட்டியில் விளையாடவில்லை.

நேற்று முன்தினம் பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது ரவிஸ் பிரெண்ட் வீசிய பந்து அவரது தலையில்பட்டதால் அவர் காயமடைந்தார்.


இது குறித்து மியுலன் கூறுகையில் இக் காயம் ஒன்றும் எனக்கு பெரிதாக தெரியவில்லை. உலகக் கிண்ணச் சுற்றுப் போட்டியின் சுப்பர் சிக்ஸ் போட்டிகளில் ஆட வேண்டுமென்று ஆவலுடன் காத்திருக்கிறேன். எனினும் முதற் போட்டியில் ஆடமுடியவில்லை. பூரண சுகம் பெற்று எதிர்வரும் புதன்கிழமை கென்ய அணியுடன் இடம்பெறவிருக்கும் ஆட்டத்தில் நிச்சயம் பங்குபற்றுவேன் என தெரிவித்தார். (த-55)



நியூசிலாந்து -சிம்பாப்வே அணிக ளுக்கிடையே இடம் பெற்ற ஆட்டத்தின் காட்சிகள் சில





## உலகக் கிண்ணக் கிரிக்கெற் - 2003

### நியூ,சிலாந்து எதிர் சிம்பாப்வே

### சிம்பாப்வே

50 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 252 ஓட்டங்கள்

| | | | |
|---|---|---|---|
| விசாட் | c ஸ்ரைரிஸ் | b கைம்ஸ் | 30 (50) |
| எப்ராகிம் | b அடம்ஸ் | | 0 (1) |
| எ.பிளவர் | Run out | | 37 (61) |
| டபிள்யூ.பிளவர் | c கைம்ஸ் | b ஓரம் | 1 (6) |
| விற்றல் | c மக்கலம் | b கைம்ஸ் | 0 (2) |
| தைபு | lbw | b ஹரிஸ் | 53 (79) |
| பில்க்நற் | Runout | | 4 (5) |
| ஸ்ரேக் | Not out | | 72 (84) |
| எர்வின் | Not out | | 31 (14) |

உதிரிகள் –24

### பந்து வீச்சு -நியூசிலாந்து

| | | | |
|---|---|---|---|
| பொன்ட் | 10 | 37 | 0 |
| அடம்ஸ் | 5 | 54 | 1 |
| ஓரம் | 10 | 28 | 1 |
| கைம்ஸ் | 4 | 16 | 2 |
| வெற்றோரி | 10 | 52 | 0 |
| ஹரிஸ் | 10 | 45 | 1 |
| அஸ்ரில் | 1 | 11 | 0 |

### நியூசிலாந்து

47.2 ஓவர்கள் முடிவில் 4 விக்கெட்டுக்களை இழந்து 253 ஓட்டங்கள்

| | | | |
|---|---|---|---|
| மக்மிலன் | c தைபு | b ஹெறாண்டோ | 8 (16) |
| பிளெமிங் | lbw | b பிலிக்நற் | 46 (42) |
| அஸ்ரில் | Not out | | 102 (122) |
| ஸ்ரைரிஸ் | c சப் | b பிலிக்நற் | 13 (22) |
| கைம்ஸ் | b எர்வின் | | 54 (73) |
| ஹரிஸ் | Not out | | 14 (10) |

உதிரிகள் - 16

### பந்து வீச்சு - சிம்பாப்வே

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீக் | 10 | 59 | 0 |
| ஹெறாண்டோ | 8.2 | 52 | 1 |
| பிலிக்நற் | 10 | 41 | 2 |
| டபிள்யூ.பிளவர் | 10 | 33 | 0 |
| விற்றல் | 3 | 19 | 0 |
| எர்வின் | 6 | 44 | 1 |


இ.ச. பேரம்பலம் சக நிறுவனத்துடன் இணைந்து

வலம்புரி

நாடாத்தும் மாபெரும் கிரிக்கெற் பரிசுப் போட்டி

போட்டியில் பங்கு பற்றுங்கள்

பெறுமதியான பரிசை வெற்றி கொள்ளுங்கள்

1.இம் முறை உலகக் கிண்ணத்தை வெல்லும் அணி எது?

2.இப் போட்டியின் சகல துறை ஆட்டக்காரர் யார்?

உங்கள் விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி

வலம்புரி

இல, 15 வெள்ளாந் தெரு

யாழ்ப்பாணம்



உலகக் கிண்ண கிரிக்கெற் போட்டி - 2003

முழுப்பெயர் : ----------------------------------------

முகவரி : ----------------------------------------

----------------------------------------

தே.அ.அ.இல : ----------------------------------------

கையொப்பம்:----------------------------------------

அனுப்ப வேண்டிய முடிவுத்திகதி

மார்ச் 15, 2003

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

## 20 பேர் பலி

இலங்கையில் கடந்த ஒரு வருட காலத்தில் அரசியல் வன்முறை காரணமாக 20 பேர் வரையிலேயே கொல்லப்பட்டுள்ளனர். முன்னர் இந்த எண்ணிக்கை ஆயிரக்கணக்கில் இருந்தது.

இதுவரை ஐந்து நேரடிப் பேச்சுக்கள் இலங்கை அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில இடம்பெற்றுள்ளன. இனப்பிரச்சினைக்கு ஐக்கிய இலங்கைக்குள் தமிழ் மக்களுக்கு உரிமைகளைக் கொண்டதான சமஷ்டி அமைப்பிலான தீர்வை சரியானதென இருதரப்பினரும் ஏற்றுக் கொண்டுள்ளனர். எனினும் தீர்வுக்கான அனைத்து விடயங்களையும் பேசி முடிவெடுப்பதற்கு நீண்ட தூர இடைவெளி உள்ளது. சமாதானப் பேச்சுக்களை ஆரம்பித்த யுத்த நிறுத்த உடன்படிக்கை நடைமுறையில் உள்ளது. தற்பொழுது பொருளாதார மற்றும் மனிதாபிமான முன்னேற்றங்கள் ஏற்படவேண்டும். இருதரப்பும் அமைத்துள்ள உப-குழுக்கள் இந்த விடயங்களில் முக்கிய முடிவுகளை எடுப்பார்கள்.

இனப்பிரச்சினைத் தீர்வு குறித்து இறுதி முடிவு எடுக்க நீண்ட காலம் எடுக்கும். உடனடி முடிவுகளை எவரும் எதிர்பார்க்கக் கூடாது. ஆனாலும் படிப்படியாக பிரச்சினைகளைத் தீர்க்கும் வரை அது சிக்கலாகத் தோன்றும். பிரச்சினைகளில் இருந்து யாரும் விலத்திவிட முடியாது.

### ஊக்கமளிக்கும் ஆதரவு

தற்போதைய சமாதான முயற்சிகளுக்கு இந்தியா, கனடா, ஜப்பான் மற்றும் ஐரோப்பிய நாடுகள் வழங்கி வரும் ஆதரவானது இரு தரப்பினருக்கும் ஊக்கமளிப்பதாக உள்ளது.

குடிபெயர்ந்த அகதிகளின் மீள் குடியேற்றத்தை ஆரம்பிக்க பேச்சுவார்த்தையின் போது இருதரப்பினரும் இணங்கியுள்ளார்கள் என்றும இராணுவம் ஒரு நேர அட்டவணையை வகுத்து உயர் பாதுகாப்பு வலயங்களுக்கு வெளியே உள்ள வீடுகள் மற்றும் ஸ்தாபனங்களில் இருந்து வெளியேறுவதை இலங்கை அரசு ஏற்றுள்ளது.

உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாக முன்னாள் இராணுவ அதிகாரி நம்பியாரின் அறிக்கையை இருதரப்பினரும் எதிர்பார்க்கின்றனர். அறிக்கை கிடைத்த பின்பே உயர் பாதுகாப்பு வலயம் குறித்து பேச ஆரம்பிப்போம். ஆனாலும் இது அரசும் புலிகளும் பேசி முடிவெடுக்க வேண்டிய விடயமாகும்.

இரு தரப்பும் இணங்கியவாறு உயர் பாதுகாப்பு வலயத்திற்கு வெளியிலுள்ள மக்களை மீளக் குடியேற்றம் முக்கியமாக அமைகின்றது.

புலிகளின் தலைவர் பிரபாகரன் விடுதலைப் புலிகளின் சமாதான முயற்சிகளின் பின்னணியில் மிக முக்கிய பங்கு வகிக்கிறார் என்பதில் எனக்கு உறுதியான நம்பிக்கை உள்ளது. யாரும் மறுக்க முடியாத அளவிற்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் அவர்தான். அவரின் இந்த முடிவுகளின் பின்னணி இல்லாமல் தமிழீழ விடுதலைப் புலிகள் இந்த சமாதான முயற்சிகளில் ஈடுபடுவார்கள் என நான் நம்பவில்லை.

தமிழீழ விடுதலைப் புலிகள் சமாதானப் பாதையில் முன்னேறி இறுதித் தீர்வை அடைவார்கள் என திடமாக நம்புகிறேன்.

அத்துடன்பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என உண்மையாக நம்புகிறார் என்று தெரிவித்தார்.

### சரியான நேரம்

மேலும் கூறுகையில் யுத்தம் எந்தப் பிரச்சினைக்கும் முடிவைத் தராது. பல ஆண்டுகளுக்கு நீடிக்குமே அன்றி எந்தவித முடிவுகளையும் அனுபவ ரீதியாக கண்டு கொள்ள முடியாது. தீர்வைக் காண்பதற்கு சரியான நேரம் வந்துள்ளதாக இரு தரப்பும் உறுதியாக நம்புவதாக நான் நினைக்கிறேன். பேச்சுவார்த்தை மூலமான தீர்வுக்கு தற்போது காலம் சரியாக உள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான சமாதான முயற்சிகளை ஆரம்பத்தில் ஊக்குவித்த அரசியல் தலைவர் இன்றைய ஜனாதிபதியே. இலங்கையில் நிரந்தர சமாதானத் தீர்வுக்கு தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச வேண்டும் என்பதை பல சந்தர்ப்பங்களில் எடுத்துக் கூறியுள்ளார்.

இலங்கை அரசாங்கம் சமாதானத்திற்காக ஆதரவு தேடி உலக நாடுகள் பலவற்றிற்கும் சென்று ஆதரவைத் திரட்டி வருகிறது. புலிகளுக்கு அவ்வாறான சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

தமிழீழ விடுதலைப் புலிகள் அரசியல் வட்டத்திற்குள் சமுதாயத்திற்குள் நகர வேண்டிய தேவையை உணர்ந்துள்ளதாக நம்புவதற்கு நல்ல அறிகுறிகள் தோன்றியுள்ளன.

தமிழீழ விடுதலைப் புலிகளின் உயர் மட்டக் குழு விரைவில் ஸ்கண்டினேவிய நாடுகளுக்கு சென்று அங்குள்ள நிலைமைகள் குறித்து கவனத்தில் எடுப்பதுடன் ஐரோப்பிய நாடுகளுக்கும் சென்று சமஷ்டி முறை பற்றி ஆராயவுள்ளது.

### இந்தியாவின் பங்களிப்பு

அத்தோடு உயர் மட்ட புலிகள் குழு தென்னாபிரிக்கா சென்று அந்நாட்டின் முன்னைய நிலைமை குறித்தும் தற்போதைய சமாதான நிலைமை குறித்தும் நேரடியாக ஆராயவுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடுவது அவர்கள் தம்மை யுத்த கால இராணுவ இயக்கத்தில் இருந்து சமாதான காலத்தின் அரசியல் இயக்க அமைப்பாக மாறுவதைக் காட்டுகிறது.

இலங்கையின் சமாதான விடயத்தில் மிக முக்கிய சர்வதேச உதவியாக நான் இந்தியாவைக் கருதுகிறேன். தெற்காசியாவின் எந்தவிதமான முடிவுகளிலும் இந்தியாவின் முக்கியத்துவத்தை ஆரம்பம் முதல் அறிந்து வைத்துள்ளோம். முக்கிய முடிவுகள் குறித்து இந்தியாவுடன் எல்லோரும் கலந்தாலோசித்துள்ளோம். ஆலோசனைகளைக் கோரியுள்ளோம்.

இலங்கையில் காணப்படும் தீர்வு இணக்கப்பாட்டில் இந்தியாவுக்கு அக்கறை இருக்கிறது. இந்தியா ஒரு ஆதரவு நிலையை தொடர்ந்து வழங்கி வரும் என எதிர்பார்க்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

## கொள்ளையர் இருவர் கைது

(கொழும்பு)

கொழும்பு பலவத்தை எச்.எஸ்.சீ. வங்கிக்கிளை கொள்ளைச் சம்பவம் தொடர்பாக இரண்டு பேரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் இக்கொள்ளையை வழிநடத்திய ஒருவரும் அடங்குவதாகக் கருதப்படுகின்றது.

இவர்களிடம் இருந்து 7 இலட்சம் ரூபா பெறுமதியான பணநோட்டுக்களும், 3 இலட்சம் பெறுமதியான நகைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபர்கள் இருவரும் முன்னரும் பல கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டிருப்பது விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது. (உ-8)

## மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் இல்லங்களுக்கிடையிலான இல்ல மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டி எதிர்வரும் 10 ஆம் திகதி திங்கட்கிழமை கல்லூரி மைதானத்தில் பி.ப. 2.30 மணிக்கு ஆரம்பமாகும்.

கல்லூரியின் அதிபர் கலாநிதி ரி.கமலநாதன் தலைமை வகிப்பார். தேசிய கல்வியியற் கல்லூரி கிழக்கு கிளையின் பிரதம ஆணையாளர் ஏ.சி.எம் இப்றாஹிம் பிரதம விருந்தினராகவும் சிறப்பு விருந்தினராக யு.நவரட்ணமும் கௌரவ விருந்தினராக கே.அருள் மாஸ்டரும் கலந்து கொள்வர். (பி)

## இன்று கொடியேற்றம்

(நெடுந்தீவு)

புங்குடுதீவு மதுரையம்பதி சிவன் ஆலய வருடாந்த உற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

ஆலய தேர், தீர்த்த, பூங்காவன நிகழ்வுகள்முறையே 18,19ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன. (உ-117)

## மகளிர் தின விழா

(யாழ்ப்பாணம்)

கட்டைவேலி-நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் அனைத்துலக மகளிர் தின விழா இன்று ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு மேற்படி சங்க காரியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சங்கத் தலைவர் த.சிதம்பரப்பிள்ளை தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக கட்டைவேலி-நெல்லியடி ப.நோ.கூ. சங்க மகளிர் குழுத்தலைவி வ.பத்தினிப்பிள்ளையும் கௌரவ விருந்தினராக ம.வி.உ.யா.மா.க. சபையைச் சேர்ந்த திருமதி செ.வேதவல்லியும் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-10)

## சீருடை முத்திரைகளைப் பெறலாம்

(பருத்தித்துறை)

கரவெட்டிப் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள பாடசாலை மாணவ மாணவிகளுக்கான சீருடை விநியோக முத்திரைகள் அவ்வப்பகுதிக் கிராம சேவை அலுவலர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதாகவும் பாடசாலை சீருடைகளைப் பெற்றுக் கொள்ள விண்ணப்பித்த மாணவர்கள் சம்பந்தப்பட்ட கிராமசேவை அலுவலர்களிடமிருந்து அதனைப் பெற்றுக் கொள்ளலாம் எனவும் கரவெட்டிப் பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (உ-52)

## இன்று வடமராட்சியில் குமார் பொன்னம்பலத்தின் உருவப்பட ஊர்தி ஊர்வலம்

(பருத்தித்துறை)

மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் திருவுருவப்பட ஊர்தி ஊர்வலமும் மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டமும் இன்று ஞாயிற்றுக்கிழமை வடமராட்சியில் பருத்தித்துறை சட்டத்தரணிகள் சங்கத் தலைவரும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சிப் பருத்தித்துறைத் தலைவருமான சட்டத்தரணி ஆர்.உருத்திரா தலைமையில் நடைபெறவுள்ளது.

திருவுருவப்பட ஊர்திப் பவனி மாலுசந்தியில் ஆரம்பமாகி வதிரிச் சந்தி ஊடாக நெல்லியடி லக்ஷ்மி தியேட்டர் வரை இடம்பெறும். தொடர்ந்து அங்கு நினைவஞ்சலிக் கூட்டம் நடைபெறவுள்ளது.

தனிப் பெரும் தலைவர் அமரர் ஜீ.ஜீ.பொன்னம்பலம், மாமனிதர் குமார்பொன்னம்பலம் ஆகியோரது திருவுருவப் படங்களுக்கு மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்படும்.

கௌரவ அதிதிகளாக வல்வெட்டித்துறை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய பிரதமகுரு சோ.தண்டபாணி தேசிகர், கரவெட்டிப் பங்குத் தந்தை வணபிதா. அன்ரனிதாஸ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி, விடுதலைப் புலிகள் அரசியல்துறை வடமராட்சிப் பொறுப்பாளர் ஆர்.தயா, யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கே.சிவானந்தமூர்த்தி, அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சி உப-தலைவர் ஆர்.ஈ.ஆனந்தராஜா, சீ.வீ.கே.சிவஞானம், எஸ்.செபஸ்ரியன், வின்சென்டிபோல் உட்பட பலபிரமுகர்கள் இதில் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளனர். (உ-52)

## எழுச்சியுடன் இடம்பெற்ற மகளிர் தின நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

நேற்று யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் சர்வதேச மகளிர் தின நிகழ்வுகள் வெகு சிறப்பாக இடம்பெற்றன.

குறிப்பாக பாடசாலைகள், தனியார் நிறுவனங்கள், கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் வங்கிக்கிளைகள் என்பவற்றில் இந்நிகழ்வுகள் இடம்பெற்றன.

அந்த வகையில் நேற்று யாழ். இந்து மகளிர் கல்லூரியில் இடம்பெற்ற மகளிர் தின நிகழ்வில் சகல விதமான அடக்குமுறைகட்கும் எதிரான சர்வதேச இயக்க ஜப்பானிய தலைவி நிமால்கா பெனாண்டோ பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

இவர் தலைமையில் தென்பகுதியில் இருந்து 250 மூவினப் பெண்கள் இந்நிகழ்வில் கலந்து கொள்ள யாழ்ப்பாணம் வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-4,7)

## கடனை மீளப்பெற சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

அரசாங்க வங்கிகளில் இருந்து பெற்ற கடன்களை திருப்பிச் செலுத்தத் தவறுவோரிடமிருந்து அவற்றை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என நிதியமைச்சர் கே.என்.சொக்ஸி தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர்களின் தனிப்பட்ட யோசனைகளுக்காக நேற்று முன்தினம் பாராளுமன்ற நடவடிக்கைகள் ஒதுக்கப்பட்டன.

இதன்போது, அரச வங்கிகளில் கடன்களைப்பெற்று திருப்பிச் செலுத்தாமல் உள்ளோர் மீது சட்டதிட்டங்களைக் கடுமையாக்க வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் அஞ்சால் உமா கூறினார்.

இதனை வழிமொழிந்த பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ஹதுன்ஹெற்றி இவ்யோசனையை அமுல் செய்தவுடன், பொருளாதாரத்தை கட்டியெழுப்பத் தேவையான பணத்தை அரசாங்கம் இலகுவாகப் பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவித்தார்.

இவ்வாறு வங்கிகளில் கடன்களைப் பெற்று மீளச் செலுத்தாத 95 வழக்குகள், தற்போது விசாரிக்கப்பட்டு வருவதாகவும் சொக்ஸி மேலும் தெரிவித்துள்ளார். (உ-8)

## ஏ.எல்.மாணவர்களுக்கு முன்னோடிப்பரீட்சை

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் ஏப்பிரல் மாதத்தில் கல்வி பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான இந்துசமய, இந்துநாகரிக பாடங்களுக்கான முன்னோடிப்பரீட்சை எதிர்வரும் 17, 19ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

சைவபரிபாலன சபையினால் நடத்தப்படும் இப்பரீட்சை யாழ்ப்பாணம், சிலாபம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் ஆகிய மாவட்டங்களில் நடைபெறவுள்ளதுடன், இத்தேர்விற்குரிய பிரவேசப் பத்திரம் மற்றும் நேர அட்டவணைகள் ஏற்கனவே சம்பந்தப்பட்ட பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-10)

## அடையாள அட்டைக்கு மீனவர் பலர் விண்ணப்பம்

(குருநகர்)

குருநகரில் வாழ்கின்ற மீனவர்களுக்கு கடற்றொழில் அமைச்சால் விரைவில் அடையாள அட்டைகள் வழங்கப்படவுள்ளன.

ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் இதுவரை மேற்படி அடையாள அட்டைக்கு விண்ணப்பித்திருப்பதாக குருநகர் கடற்றொழில் கூட்டுறவுச் சங்கத்தலைவர் எம்.அன்ரனி வின்ஸ்லோஸ் தெரிவித்தார். இம்மாத முடிவிற்குள்ளாக வழங்கப்படவிருக்கும் மேற்படி அடையாள அட்டைகளைப் பெற இன்னமும் விண்ணப்பிக்காதவர்கள் தங்களின் புகைப்படங்களுடன் உடனடியாக சங்கப் பணிமனையில் பதிவுகளை செய்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (உ-74)

யாழ் நகரின் பல்வேறு நேற்று இடம்பெற்ற சர்வதேச மகளிர் தின விழாக்களில் பிடிக்கப்பட்ட படங்கள்.
படங்கள்: க.பவன்





ஈராக் விவகார இழுபறி

# ஐ.நா. பாதுகாப்புச்சபை மூன்று குழுக்களாகப் பிளவு

(வாஷிங்டன்)
ஈராக் விவகாரம் தொடர்பில் எழுந்துள்ள கருத்து முரண் பாடுகளை அடுத்து, ஐக்கிய நாடுகளின் பாதுகாபபுச்சபைமூன்று குழுக்களாக பிளவுபட்டுள்ளது.

ஈராக் மீது தாக்குதல் நடத்துவதற்கு தேவையான புதிய தீர்மானத்தை நிறை வேற்றிக்கொள்ள குறைந்த பட்சம் 9உறுப்பு நாடுகளின் ஆதரவை திரட்டும் முயற்சியில் அமெரிக்கா ஈடுபட்டுள்ள நிலையில் இந்தப்பிளவு ஏற்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா தலைமையில் பிரிட்டன்,ஸ்பெயின்,பல்கேரியா ஆகிய நாடுகள்ஒருகுழுவாகவும், பிரான்ஸ், ரஷ்யா, ஜேர்மன் ஆகியவை ஒருகுழுவாகவும் பிளவு பட்டுள்ள அதேவேளை,ஏனைய நாடுகள் எந்தப்பக்கத்தையும் சாராது தனித்து ஒருகுழுவாக இயங்கஆரம் பித்துள்ளன.

இதனை அடுத்து ஈராக் மீது தாக்குதல் நடத்துவதற்கு அனுமதி வழங்கும் இரண்டாவது தீமானத்தை நிறைவேற்றிக் கொள்வதில் அமெரிக்கா மற்றும் பிரிட்டன் ஆகிய நாடுகள கடும் சிக்கல்களை எதிர்நோக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.(உ-2)

## நைஜீரிய எதிர்கட்சித் தலைவர் சுட்டுக் கொல்லப்பட்டார்

(அபுஜா)
நைஜீரியாவின் எதிர்க்கட்சி சிரேஷ்ட தலைவர் ஹரீமார்சல் நேற்று முன்தினம் நைஜீரியா தலைநகர் அபுஜாவல் வைத்து சுட்டுக் கொல்லப் பட்டுள்ளார்.

எதிர்வரும் ஏபிரல் மாதம் நைஜீரியாவில் பொதுத்தேர்தல் இடம் பெறவுள்ளது.

இவ்வாறான நிலையில் எதிர் கட்சியின் சிரேஷ்ட தலைவர் சுட்டுக் கொல்லப்பட்டமை மிக மோசமான அரசியல் படுகொலையென அரசியல் வட்டாரங்கள் விமர்சித்துள்ளன.

இவரது படுகொலையை அடுத்து, அகிலன்ற் நைஜீரிய மக்கள்கட்சி அவசர கூட்டம் ஒன்றினைக் கூட்டவுள்ளதாக கட்சியின் பேச்சாளர் மொதிபோ இப்ர.்.கீம் தெரிவித்துள்ளார்.(உ-2)


## பலஸ்தீன அதிகாரம் பகிர்ந்தளிப்பு

(ரெல்அவிவ்)
பலஸ்தீன விடுதலை இயக்கத்தைச்சேர்ந்த மூத்த தலைவர்களில் ஒருவரான முகமௌத் அப்பாஸ் என்பவரை அந்தநாட்டின் முதல் பிரதமராக யஸீர் அரபாத் நியமித்துள்ளார்

அதிபரின் அதிகாரத்தை பகிர்ந்தளக்க வேண்டும், சீரமைப்புக்களை மேறகொள்ள வேண்டும் என்று சர்வதேச அளவில் அளிக்கப்படடநிர்ப்நத்தைத் தொடர்ந்து அதிபர் அரபாத் இந்த நடவடிக் கையை மேற்கொண்டுள்ளார் என்று பலஸ்தீன அதிகாரிகள தெரிவித்துள்ளனர். (உ-2)



ஹெப்ரன் நகரின் அருகில், கிர்யாத் அரபாவில் உள்ள யூதக் குடியேற்றத்துள் இரு ஆயுததாரகள் ஊடுருவியதன் பின் ஒரு கட்டடத்தின் முன் இரு இஸ்ரேலிய இராணுவத்தினர் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.



முகலாயர் காலத்தில் உருவான 'மேஜிக்' எனப்படும் கூஜாவே இது. இக்கூஜா தயாரிக்கும் கலை தற்போது அழியும் நிலையில் உள்ளதாக தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

WORLD NEWS உலக தரிசனம்

## ஐவரிக் கோஸ்டில் மீண்டும் மோதல்கள் வெடித்தன

### பெருமளவு பொதுமக்கள் பலி

(அபிட்ஜானி)
ஐவரிக் கோஸ்டின் இராணுவத்தினருக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையில் மீண்டும் மோதல்கள் வெடித்துள்ளன.

மங்கோலா நகருக்கு அருகே இரு தரப்பினருக்கும் இடையே நேற்று முன்தினம் இந்த மோதல்கள் இடம் பெற்றுள்ளன.

அரச துருப்புக்கள் தம்மீது நடத்திய தாக்குதலையடுத்தே தாமும் பதில் தாக்குதல் நடத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டதாக ஐவரிக் கோஸ்ட் தீவிரவாதிகள் நியாயப் படுத்தியுள்ளனர்.

இதேவேளை, இந்தமோதலின் போது, பெருந்தொகையான பொது மக்கள் கொல்லப்பட்டுள்ளதாக தீவிரவாதிகள் அறிவித்துள்ளனர்.

மோதல்களையடுத்துபொது மக்கள் தமது சொந்த இடங்களை விட்டு வெளியேறிவருவதாகவும் ஐவரிக் கோஸ்டில் இருந்து வெளியாகும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தீவிரவாதிகளின் பிரதேசங்களை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரும் நடவடிக்கைகள் வெற்றிகரமாக நடைபெற்றுவருவதாக ஐவரிக் கோஸ்டிலுள்ள பிரான்ஸ் இராணுவ அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். (உ-2)

ஐ.நா. மனித உரிமை

## கண்காணிப்பாளர்களை ஈராக்கில் நிறுத்தக் கோரிக்கை

(நியூயோர்க்)
ஐக்கிய நாடுகளின் மனித உரிமை கண்காணிப்பாளர்கள் ஈராக்கில் நிலை நிறுத்தப்பட வேண்டும் என சர்வதேச மன்னிப்புச்சபை கேட்டுள்ளது.

தற்போது ஈராக்கில் இடம் பெற்றுவரும் மனித உரிமை மீறல்களை எதிர் கொள்ளவும் அமெரிக்காவின் உத்தேச தாக்குதலின் பின் விளைவுகளை கண்காணிக்கவும் அங்கு தகுதிபெற்ற மனித உரிமை கண்காணிப்பாளர்கள் போதியளவில் உடனடியாக நிலை நிறுத்தப்பட வேண்டும் என்று சர்வதேச மன்னிப்புச் சபையின் செயலாளர் நாயகம் அஜிரின்கான் விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

மனித உரிமைகள் கண்காணிப்பாளர்கள் தமது நாட்டிற்குள் வருவதை ஈராக் நீண்ட காலமாக நிராகரித்து வந்துள்ளது.

அத்துடன் அங்கே மனித உரிமைகள் மீறல்கள் இடம்பெறுவதாகமனித உரிமை மீறல்களை உத்தேச யுத்தத்திற்க ஒரு காரணமாகக் கூறி வருகின்றனர். எனினும் மனித உரிமை தொடர்பான விசேட விசாரணையாளர் ஒருவர் கடந்த வருடம் ஈராக் வர அனுமதிக்கப்பட்டார். 10 ஆண்டுகளிற்கு பின்னர் இவ்வாறான விசாரணையாளர் ஒருவர் ஈராக்வர அனுமதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.(பி)



டெர்பிஷைர் நகரின் ஏஷ்போர்ன் பகுதியில் நடைபெற்ற ஷ்ரோ வெடைட் ஃபுட்பால் ஆட்டத்தின் இரண்டாவது நாள் போட்டி துவங்குவதற்கு முன்னதாக பந்தினை கையில் பிடித்திருக்கிறார் இங்கிலாந்து இளவரசர் சாள்ஸ். கடந்த 17ஆம் நூற்றாண்டு முதல் இந்தப் போட்டிகள் பாரம்பரியமாக நடத்தப்பட்டு வருகின்றன.

## ஷேக்ஸ்பியரின் நூல் விற்பனை

(லண்டன்)
உலக பெருங்கவிஞர்களில் ஒருவரான வில்லியம் ஷேக்ஸ்பியரின் நாடகங்கள் அடங்கிய பழம் பெரும் நூல் ஒன்றை ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்தின் ஓரியல் கல்லூரி விற்பனை செய்துள்ளது. இதன் மதிப்பு 3.5 மில்லியன் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. கல்லூரியின் பாடப் புத்தகங்களுக்காகவும் திருத்த வேலைகளுக்காகவும் இந்நூல் விற்பனை செய்யப்படுவதாகக் கூறப்படுகின்றது.

1623ஆம் ஆண்டில் அச்சிடப்பட்ட இந்நூல் இந்தக்கல்லூரியின் நூலகத்தில் இரண்டு நூற்றாண்டுகளாகப் பேணி பாதுகாக்கப்பட்டு வந்துள்ளது. சேர் போல் கெட்டி என்பவர் இதை வாங்கியுள்ளார்.

தாம் ஏற்கனவே சேகரித்து வைத்துள்ள ஷேக்ஸ்பியரின் ஏனைய நூல்களுடன் சேர்த்துப் பேணுவதற்காக இந்த நூலைத் தாம் வாங்கியதாக பரோபகாரியான சேர் போல் கூறியுள்ளார். ஒரு பக்கத்தில் மட்டும் பெரிய பக்கங்களால அச்சிடப்பட்டுள்ள இந்நூல் விற்கப்பட்டமை குறித்து பல அறிஞர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். ஆனால் நூலை வாங்கியவர் சேர் போல் என்பதால் அந்த நூல் பத்திரமாகவே இருக்கும் என்று வேறு சிலர் கூறியுள்ளனர்.

உலக மகாகவி ஒருவரின் பெறுமதி மிக்க ஒரு சிலை திருத்த வேலைக்காக கற்களை வாங்குவதற்காக விற்கப்பட்டிருப்பது அபத்தமான செயல் என ஒரு கல்விமான் கூறியுள்ளார். (பி)




ஐ.நா சபையின் அமெரிக்கப் பிரதிநிதி ஜோன் நிக்ரோபொன்ரே ஐ.நா. பாதுகாப்புச் சபைக்கு வெளியே செய்தியாளர்களைச் சந்திக்கிறார். ஈராக்கிற்கெதிராக பலப்பிரயோகம் செய்யும் தீர்மானத்துக்கு வாக்களிக்கத் தயாராகுமாறு ஐ.நா.சபை உறுப்பினர்களை அமெரிக்கா கேட்டுள்ளதாக அவர் சொன்னார்.

## ஆஸ்துமா நோயாளிகளுக்கு பயனளிக்கும் புதியகருவி

### லண்டனில் கண்டுபிடிப்பு

(பாரிஸ்)
ஆஸ்துமா தாக்குதல் வருவதை முன்கூட்டியே அறிந்து நோயாளியை எச்சரிக்கை செய்யக் கூடிய செல் போன்களை பிரிட்டிஷ் டாக்டர்கள் உருவாக்கியுள்ளனர்.

ஆஸ்துமா நோய் உள்ளவர்கள், இந்த செல்போன்களில் உள்ள கண் காணிப்பு மீற்றரில் தினமும் இருமுறை வாயால் ஊதவேண்டும். அவரது மூச்சுக் காற்றை அந்த மீற்றர் பரிசோதித்து, நோயாளியின் நுரையீரலின் செயல்பாட்டைக் கண்டறியும். ஆஸ்துமா தீவரமாகத தாக்குதவற்கான வாய்ப்பு இருந்தால், உடனே அவரது டாக்டருக்கு ஈ-மெயில் மூலம் தகவல் தெரிவிக்கும்.

இத்தகவலைப் பெறும் டாக்டர். தனதுநோயாளியுடன் தொடர்பு கொண்டு, மாற்று மருந்தை சாப்பிடுமாறு அலோசனை தருவார்.

தீவிர ஆஸ்துமா நோயால் அவதிப்படுவோர் இப்போது, மெக்கானிக்கல் மீற்றரில் தினமும் வாயால் ஊதி, நுரையீரல் செயல் பாட்டின் அளவைக் குறித்து வைக்கின்றனர். மாதம் ஒரு முறை அல்லது 2மாதங்களுக்கு ஒரு முறை டாக்டரிடம் சென்று தங்கள் குறிப்பேட்டைக் காட்டி சிகிச்சை பெறுகின்றனர். இந்த முறையை பலரும் சரியாகப் பின்பற்றுவதில்லை. அல்லது மறந்து விடுகின்றனர். இதைத் தவிர்க்க ஆஸ்மா தாக்குதலைக் கண்டறியும் பாரிய சுமை ஆகிய காரணங்களினால ஜப்பானில் தற்கொலைச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

இதைத்தவிர்க்க ஆஸ்துமா தாக்குதலைக் கண்டறியும் புதிய வகை செல்போனை பிரிட்டிஷ் டாக்டர்கள் உருவாக்கியுள்ளனர். அந்த செல்போனை வைத்திருக்கும் நோயாளி, அதில் உள்ள மெக்கானிக்கல் மீட்டரில் வாயால் ஊத மறந்துவிட்டால், அந்த செல்போன் தானாகவே, திரை மூலம் அவருக்கு ஞாபகப்படுத்தும். இதற்கேற்ற வகையில் அதில் மென்பொருள் (Software) பொருத்தப்பட்டுள்ளது.

மேற்கு லண்டனில் சோதனை ரீதியில் சிலருக்கு இந்த செல்போன் வழங்கப்பட்டுள்ளது. இது வெற்றிகரமாக செயல்பட்டால் நீரிழிவு நோயாளிகள், நுரையீரல் தொற்று நோயாளிகளுக்கும் பயனுள்ளதாக இருக்கும் என்று பிரிட்டிஷ் சைன்ஸ் வீக்லி கூறியுள்ளது. (பி)

# திக்கம் வடிசாலை நிர்வகிப்பு இழுபறியால் தினமும் 50 ஆயிரம் போத்தல் கள் இழப்பு

(தென்மராட்சி)

திக்கம் வடிசாலையில் உற்பத்தி நடவடிக்கைகள் இன்னமும் ஆரம்பிக்கப்படாமையால் குடாநாட்டிலுள்ள 10 ஆயிரம் சீவல் தொழிலாளர்களின் தொழில் முயற்சிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

தற்போது இத்தொழிலாளர்களினால் உற்பத்தி செய்யப்படும் பனங்கள்ளு சங்கத் தவறணைகளிலும், அங்கத்தவர்களின் வீடுகளிலும் தேங்கியிருப்பதாகத் தெரிகின்றது.

அதேவேளை, வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் மற்றும் தீவகப் பிரதேசங்களில் சேகரிக்கப்படும பனங்கள்ளில் தினசரி 50 ஆயிரம் போத்தல் மண்ணுக்குள் ஊற்றப்பட்டு அழிக்கப்படுகின்றது.

அத்துடன், இப்பிரதேசங்களில உள்ள பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களில் சுமார் 2 லட்சம் போத்தல் பனங்கள் கையிருப்பில் இருப்பதாகவும் கூறப்படுகின்றது.

மேலும், சீவல் தொழில்களினால் தினசரி உற்பத்தி செய்யப்படும் பனங்கள்ளினை தொடர்ந்தும் கையிருப்பில் வைத்திருப்பதற்குப் போதிய கொள்கலன் வசதிகள் இல்லாமல் இருப்பதாகவும் கூறப்படுகின்றது.

இது இவ்விதமிருக்க, பனங்கள்ளு தொடர்ந்தும் ஊற்றப்பட்டு வருவதன் காரணமாக சீவல் தொழிலாளர்களினால் உற்பத்தி செய்யப்படும் பனம் கள்ளுக்கு உரிய கொள்வனவு சம்பளத்தினையும் வழங்கமுடியாத நிலை காணப்படுவதாகவும் அறியப்படுகின்றது.

இதேசமயம், திக்கம் வடிசாலையை உடனடியாகத்திறந்து வைக்க நடவடிக்கை எடுக்கும் படி சீவல் தொழிலாளர்களின் கூட்டுறவு சங்கங்கள் அமைசசர் மகேஸ்வரனிடம் கோரிவருகின்றனர். (உ-77-43)

## விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யா/சென் மேரீஸ் (ஓ.எல்.ஆர்) வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை திங்கட்கிழமை பி.ப 2மணிக்கு சிங்கள மகாவித்தியாலய மைதானத்தில் அதிபர் ம.செபஸ்ரியாம் பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கமும் சிறப்பு விருந்தினராக யாழ். கல்வி வலயப் பணிமனைக் களஞ்சியப் பொறுப்பாளர் ம. பிரதீபனும் கௌரவ விருந்தினராக புனித அடைக்கல அன்னை பங்குத் தந்தை இ.ம.பயஸ்அடிகளாரும் கலந்து கொள்ளவுள்ளனர். (உ_10)

## உலக வங்கித் தூதுக்குழு மட்டக்களப்பு விஜயம்

(கொழும்பு)

அமைச்சர் ரவூப் ஹக்கீமின் வேண்டுகோளுக்கு இணங்க உலக வங்கியின தூதுக்குழு நேற்று முன்தினம் அம்பாறை மாவட்டத்துக்கு விஜயம் செய்துள்ளது.

உலக வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் பற்றர் ஹரோல்ட், ஆலோசகர் நரேஸ் துரைசாமி ஆகியோரைக் கொண்ட இத்தூதுக் குழுவினர் சம்பாந்துறை, மருதமுறை, கல்முனை, காரைதீவு, நிந்தவூர், அட்டாளைச் சேனை, ஒலுவில், அக்கரைப்பற்று முதலான பகுதிகளுக்கு விஜயம் செய்து, அப்பகுதிகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தித் திட்டங்களையும் ஆராயவுள்ளனர்.

அத்துடன், இலஙகை தென்கிழக்கு பல்கலைக்கழக ஒலுவில் வளாகம், கிழக்கிலங்கை அரபுக் கல்லூரி, அம்பாறை மாவட்ட தொழில் பயிற்சி நிலையம் என்பனவற்றுக்கும் இக்குழு விஜயம் செய்யவுள் ளது.

உலகவங்கியின் தூதுக் குழுவினருடன் திகாமடுல்ல மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் என். ஐ. அன்வர் ஸ்மைல்ட் சிரான் நடவடிக்கைச் செயலக மேலதிகப் பணிப்பாளர் ஆகியோரும் இவர்களுடன் மட்டக்களப்புக்கு விஜயம் செய்துள்ளனர். (உ-8)

## நெல்லைக் கொள்வனவு செய்யத் தவறின் விவசாயிகள் உயிர்துறக்கும் நிலை ஏற்படும்

### பொ.ஜ.மு. பேச்சாளர் பரிந்து பேச்சு

(கொழும்பு)

ஏனையோரிற்கு உணவளிப்பதற்காக உழைக்கும் விவசாயிகளிடம் இருந்து அரசு நெல்லைக் கொள்வனவு செய்யாவிட்டால் அவர்கள் கிருமி நாசினி அருந்தி உயிர்துறக்க வேண்டிய நிலைதான் ஏற்படும்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு பேசிய பொது ஜனஐக்கிய முன்னணியின் பேச்சாளர் சரத்அமுனுகம தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாகத் தொடர்ந்து அவர் பேசுகையில்; விவசாயிகளிடம் இருந்து நெல்லைக் கொள்வனவு செய்ய அரசு போதிய நிதியினை சம்பந்தப்பட்ட நிலையங்களுக்கு வழங்கவில்லை.

அத்துடன், உரங்களின் விலைகள் பன்மடங்காக அதிகரித்துள்ளன. விவசாய உபகரணங்கள் மற்றும் கிருமி நாசினி மீது விதிக்கப்பட்ட உச்சவரியால் இவற்றின் விலையும் அதிகரித்துள்ளது.

இதனால் பிறர் உயிர்காக்க உழைக்கும் விவசாயிகள் கிருமி நாசினி அருந்தி தம்முயிரை நீக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள்.

விவசாயிகளிடம் இருந்து நெல்லைக் கொள்வனவு செய்ய 450 மில்லியன் ரூபா தேவை. ஆனால், அரசாங்கமோ 15 மில்லியன் ரூபாவை மட்டுமே வழங்கியுள்ளது.

அதுமட்டுமன்றி, நெல்லைக் கொள்வனவு செய்வதற்கென கூட்டுறவுச் சங்கங்களுக்கு கடன் வழங்க வேண்டாம் என இலங்கை வங்கிக்கும், மக்கள் வங்கிக்கும் அரசு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்நிலையில், அரசு நீர்வரியையும் அறவிட தீர்மானித்துள்ளது. இத்தீர்மானம் ஏற்கனவே பாராளுமன்றில் அறிவிக்கப்பட்டுவிட்டது. எனவே இவற்றை எதிர்த்து விரைவில் நாம் விவசாய போராட்டம் ஒன்றையும் நடத்துவதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறோம் எனக் குறிப்பிட்டார். (உ-10)

## பெண் பிரதிநிதிகள் ஒன்றுகூடி உரிமைகளை உறுதிசெய்ய காத்திரமான நடவடிக்கைகளுக்கு அடித்தளம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தின் அனைத்துப் பிரதேசங்களையும் சேர்ந்த பெண்கள் பிரதிநிதிகளின் ஒன்று கூடல் நேற்றுமுன்தினம் நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில், யாழ். மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் கலைவிழி தலைமையில் இடம் பெற்றது.

யாழ். மாவட்ட பெண்களின் பிரச்சினைகள் மற்றும் தேவைகளைக கண்டறிவதற்கான இவ்ஒன்றுகூடலில காத்திரமான பல முடிவுகள் எடுக்கப்பட்டன.

பிரதானமாக பெண்களின் உரிமைகளையும், கௌரவத்தையும் உறுதிப்படுத்துவதற்கும், பொருளாதார நிலையை மேம்படுத்துவதற்கு, அபிவிருத்தி வேலைகளை முன்னெடுப்பதற்கும், அவர்களின் நலன்களைய்யும், பாதுகாப்பையும் சட்டரீதியாக உறுதிப்படுத்து வதற்கும் அமைப்பு ஒன்றைத் தோற்றுவிப்பதற்கான தீர்மானம் இவ் ஒன்றுகூடலில் எடுக்கப்பட்டது.

இவ்வமைப்பிற்கு அதிகாரமுள்ள பல்வேறு தரப்பட்ட பிற அமைப்புகளினதும் ஆலோசனைகள் பெறுவதற்கான முன்முயற்சிகளும் மேற்கொள்ளப்படவுள்ளன.

இவ்அமைப்பானது எதிர்காலத்தில் பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளில் இருந்து பாதுகாப்பு அளித்து அவர்களது வாழ்க்கையை மேம்படுத்தும் ஓர் நடவடிக்கைக் குழுவாகச் செயற்பட வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது. (உ-4-43)

## மாணவர் சத்துணவுத் திட்டம் விஸ்தரிப்பு

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களுக்கு போஷாககு உணவு வழங்கும் திட்டம் இவ்வாண்டு முதல் மேலும் விஷ்தரிக்கப்படும் என பாடசாலைக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

கடந்த ஆண்டில் நாடளாவிய ரீதியில் இந்தத்திட்டம் 120 பாடசாலைகளில் நடைமுறைப் படுத்தப்பட்டிருந்தது.

இவ்வருடம் இத்திட்டம் 600 பாடசாலைகளிற்கு விஸ்தரிக்கப்படவுள்ளது.

இதேவேளை, கடந்த வருடம் இத்திட்டம் நடைமுறையில் இருந்த போது தரம் 1 இல் கல்விகற்கும் மாணவர்களின் பாடசாலை தினவரவு அதிகரித்திருந்தமை அவதானிக்கப்பட்டதையடுத்தே இத்திட்டம் இவ்வாறு விஸ்-தரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (உ-10)

## சமாதானம் நின்று நிலைக்க பிரதமரின் கரத்தைப் பற்றுவோம்

### அழைக்கிறார் உள்துறை அமைச்சர்

(கொழும்பு)

தற்போது ஏற்பட்டுள்ள சமாதானம் தடம் புரண்டு விடாமல் நின்று நிலைப்பதற்கு நாம் அனைவரும் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவிற்கு ஆதரவு தெரிவிக்க வேண்டும் என உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

வத்தளை நகர மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு பேசுகையிலேயே ஜோன் அமரதுங்க இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் பேசுகையில், தற்போது ஏற்பட்டுள்ள சமாதானசூழ் நிலையினால் அனைத்து மக்களும் நிம்மதியாகவும் அச்சமின்றியும் வாழ்கின்றனர்.

இத்தகைய தொரு சூழ்நிலையினை உருவாக்கித்தந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு நாம் அனை வரும் நன்றி கூற கடமைப்பட்டுள்ளோம்.

சமாதானத்தை விரும்பாத சில தீய சக்திகள் இருக்கின்ற போதும் பெரும்பான்மையான மக்கள் நிரந்தர சமாதானத்தையே விரும்புகிறார்கள்.

தற்போது ஏற்பட்டுள்ள சமாதானம் நிரந்தரமானதாக அமைய வேண்டும். இதனை நாம் எந்தவகை யிலும் சீர் குலைக்க முனையக் கூடாது என்றார். (உ-10)

## கணனிக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய கல்லூரியின் கணனிப் பயிலுநர்களும், முறைசாராக் கல்விப் பிரிவினரும் இணைந்து "கம்பியூட்டர் எக்ஸ் பிரஸ்" கணனிப் பத்திரிகையின் ஆதரவில் ஒரு நாள் கணனிக் கருத்தரங்கினை நாளை திங்கட் கிழமை காலை 9 மணி முதல் யாழ். மத்திய கல்லூரியின் தம்பர் மண்டபத்தில் நடாத்தவுள்ளனர்.

இப் பயிற்சிக் கருத்தரங்கில் யாழ். மத்திய கல்லூரியின் சகல உயர் வகுப்பு மாணவர்களும் கல்வித் திணைக்கள முறைசாராக் கல்வி கணனிப் பிரிவின் சகல நிலைய மாணவ, மாணவியர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

முறைசாராக் கல்வி கணனிப் பிரிவில் ஏனைய கல்லூரி நிலைய மாணவ மாணவியரும் இக்கருத்தரங்கிற்கு அனுமதிக்கப்படவுள்ளனர்.

இதில், கணனி பற்றிய வரலாறு, இயக்கம், சந்ததி படி முறை விளக்கங்களுடன் கணனி உலக வலைப் பின்னல் அமைப்பு உருவாக்கலுடன் பாடத்திட்டங்கள், கற்றல் முறைகள் பற்றிய விளக்கங்கள் திரை மூலம் விளக்கப்படவுள்ளன. (உ)

## இன்று கொடியேற்றம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு கிழக்கு ஆளமாவனப பிள்ளையார் ஆலய வருடாந்த உற்சவம் இன்று ஞாயிற்றுக் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாக வுள்ளது.

தேர், தீர்த்த உற்சவங்கள் முறையே 18,19 ஆம்திகதிளில் இடம்பெறவுள்ளன. (உ-126)

## பரீட்சை அட்டவணை பற்றி அறிக்கை சமர்ப்பிக்குக!

### பிரதமர் பணித்துள்ளாராம்

(கொழும்பு)

இவ்வாண்டிற்கான க.பொ.த (உ/த) பரீட்சை அட்டவணை தொடர்பாக தனக்கு அறிக்கை சமர்பிக்குமாறு பிரதமர் விக்கிரமசிங்க கல்வியமைச்சின் செயலாளருக்கு பணித்துள்ளதாக பிரதமரின் அலுவலகக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ் அலுவலகக் குறிப்பில் மேலும்,

இவ்வாண்டின் ஏப்ரல் மாத விடுமுறை தொடர்பான அறிக்கை ஏற்கனவே கிடைத்திருக்கிறது. அதன்பிரகாரம் பாடசாலைகளுக்கான விடுதலை மே மாதம் 5ஆம் திகதி முடிவடைகிறது. பாடசாலைகள் வெசாக் பண்டிகைக்கான ஆயத்தங்களை செய்வதற்கு இது வசதியாக இருக்கும்.

இதேவேளை, க.பொ.த(உ/த) பரீட்சைக்கான நேர அட்டவணையை தாம் ஏற்கனவே தயாரித்திருப்பதாகவும் வெசாக் பண்டிகையை முன்னிட்டு சில மாற்றங்கள் செய்யப்பட்டிருப்பதாகவும் கல்வியமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

இதன் பிரகாரம் உயர்தரப் பரீட்சை ஏப்ரல் 21 ஆம் திகதி ஆரம்பமாகி மே மாதம் 3ஆம் திகதி வரை தொடர்வதுடன், இரண்டு வாரங்கள் வெசாக் பண்டிகைக்காக நிறுத்தி வைக்கப்பட்டு பின்னர் மீண்டும் மே 19 ஆம் திகதி ஆரம்பமாகி மே 30 ஆம் திகதியுடன் முடிவடையவுள்ளது. (உ)

## வளர்ச்சிப் போக்கில் இலங்கை வர்த்தக வங்கி

(கொழும்பு)

இலங்கை வர்த்தக வங்கியானது தனியார் வர்த்தக வங்கிகளுடன் ஒப்பீட்டுப்பார்க்கையில் இரண்டாவது பாரிய வர்த்தக நிலையமாக உயர்ந்துள்ளதாக அண்மையில் கொழும்பில் நடைபெற்ற செய்தி யாளர் மாநாட்டில் வருடாந்தப் பெறுபேறு பற்றிக் கருத்து வெளி யிட்ட இலங்கை வர்த்தக வங்கித் தலைவர் மகேந்திர அமரசூரிய தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

இலங்கை வர்த்தக வங்கி கடந்த ஆண்டில் சராசரி அளவுகளையும் மிஞ்சி செயற்பட்டு வந்திருக்கிறது.

கடந்த ஆண்டில் வங்கியின் மொத்த வர்த்தகம் 44 கோடி 20 லட்சம் ரூபாவில் இருந்து 8.1 மில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது.

கடந்த காலங்களை விட சென்ற ஆண்டு கூடுதலான வாடிக்கையாளர்கள் பணத்தை வைப்புச் செய்தமையே இதற்கு முக்கிய காரணமாக உள்ளது என்றார். (உ-10)

## குடிக்கும் நீருக்காக மாணவர்கள் அலைச்சல்

(மிருசுவில்)

யா/உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தில் உள்ள இரண்டு கிணறுகளும் உவர் நீராகக் காணப்படுகின்றன.

இதனால் இப்பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்கள் குடிநீரைப் பெறுவதற்காக பாடசாலையினை அண்டிய அயற் பகுதிகளிற்கு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இப்பாடசாலைக்கு குழாய்க் கிணறுகளை அமைத்துக் கொடுபபதன் மூலம் மாணவர்கள் எதுவித சிரமமும் இன்றி குடிநீரைப் பெற்றுக் கொள்ள முடியும் என வலியுறுத்தப்பட்டுள்ளது. (உ-81)

### வட-கிழக்கு ஆசிரியர்களின்

# கோரிக்கைக்கு செவி சாய்க்கத் தவறின் கல்விசார் அமைச்சர்களின் வருகைக்குஎதிர்ப்பு

## இ.த.ஆ.ச. ஏற்பாட்டில் நடந்த கூட்டத்தில் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் வட-கிழக்கில் சேவையாற்றும் தொண்டர் ஆசிரியர்களில் ஆயிரம் பேரை உடனடியாக நிரந்தரமாக்கல் உள்ளிட்ட 11 அம்சக் கோரிக்கைகளை முன் வைத்து வடக்கு-கிழக்கு மாகாணத்தில் எதிர்வரும் 11ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ள ஒருநாள் அடையாள வேலை நிறுத்தம் மற்றும் அமைதிப் பேரணி தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நேற்று யா/வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

இதில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சகல கிளைகளினதும் தலைவர், செயலாளர், பொருளாளர்கள், வலய அமைப்பின் பிரதிநிதிகள், மாவட்டத் தாய்ச்சங்கப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அமைதிப் பேரணி செவ்வாயன்று மு.ப 10 மணிக்கு யாழ்.வேம்படி உயர்தரப் பாடசாலையில் இருந்து ஆரம்பித்து ஆஸ்பத்திரி வீதி, மத்திய பஸ் நிலையம், முனீஸ்வரன் வீதி, பிரதான வீதி, கண்டி வீதி ஊடாக யாழ். மாவட்டச் செயலகத்தைச் சென்றடைந்து அங்கு அரச அதிபரிடம் தமது கோரிக்கைகள் தொடர்பில் மகஜர் கையளிப்பது எனவும்,

பிரதமர் விக்கிரமசிங்க, கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு ஆகியோர்க்கு அதன் பிரதிகளை அனுப்புவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன்,

* சங்கத்தினால்சமர்ப்பிக்கப்பட்ட 30அம் சகம் கோரிக்கைகளை நிறைவேற்றப் படும் வரை கல்வித்துறை சார்ந்த சகல அமைச்சர்களதும் யாழ். மாவட்ட வருகைக்கு எதிர்ப்புக் காட்டல்

* கந்தரோடையில் அமைக்கப் படும் புத்த விகாரையை எடுக்கும்படி பிரதமர், நோர்வே நாட்டுத் தூதுவர் ஆகியோருக்கு மகஜர் அனுப்புதல்.

* அமைதிப் பேரணியில் யாழ். மாவட்டத்தில் உள்ள சகல ஆசிரியர்களும் ஆசிரியா பயிற்சிக் கலாசாலை மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு அழைத்தல்.

* தொழில் நுட்பக் கல்லூரிகள், யாழ். பல்கலைக்கழகமும் சகல செயற்பாடுகளையும் நிறுத்திப் போராட்டத்திற்கு ஆதரவு வழங்கக் கோருதல்.

ஆகிய தீர்மானங்களும் எடுக்கப்பட்டன.

இந்த அடையாள வேலை நிறுத்தத்திற்கு யாழ். மாவட்ட தொண்டா ஆசிரியர் சங்கம், உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கம், பகுதி நேர ஆங்கில ஆசிரியர் சங்கம்,கடல்வள மீன் பிடியியல் டிப்ளோமா ஆசிரியர் சங்கம், வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் ஆகியன ஆதரவு வழங்க முன்வந்திருப்பது குறிப்பிடத் தக்கது. (உ-4)

## கூட்டம்

(சில்லாலை)

சங்கானை மாவடி சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப.3.30 மணிக்கு மேற்படி சனசமூக நிலையக் கட்டடத்தில் க.ஸ்கந்தராசா தலைமையில் நடைபெறவுள்ளளது. (உ-58)

(சில்லாலை)

சில்லாலை புனித கதிரை மாதா ஆலயத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு வணபிதா. அன்ரனிப் பிள்ளை தலைமையில் 'அன்பியக் கூட்டம்' நடைபெறவுள்ளது. (உ-58)

## திருப்பணி

(பருத்தித்துறை)

தும்பளை தம்புருவளை ஸ்ரீசித்தி விநாயகர் ஆலய திருப்பணி வேலைகள் சுமார் 8 இலட்சம் ரூபா செலவில் நடைபெற்று வருகின்றன.

மடப்பள்ளி,வாகனசாலை, களஞ்சிய அறை என்பன சுமார் 3இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. தற்போது எல்லைச் சுவர் 5 இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. (உ-52)

## வாகனத்தைப் பெற்றுத் தருமாறு பொலிஸ் நிலையத்தில் புகார்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பிரதேசசபைக்குச் சொந்தமான பிக் அப் வாகனத்தை ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினரிடமிருந்து பெற்றுத்தர நடவடிக்கை எடுக்குமாறு சபையின் செயலாளர் பருத்தித்துறைப் பொலிஸில் புகார் செய்துள்ளார்.

இவ்வாகனம் உளளூராட்சி அமைச்சினால் பருத்தித்துறை பிரதேச சபைக்கு வழங்கப்பட்டதாகும். செயலாளர் அ.அ நடராஜாவின் மேற்படி புகாரில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

252-642 பிக் அப்வாகனத்தை ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியைச சேர்ந்த பருத்தித்துறை பிரதேச சபைத்தலைவர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன் பாவித்து வந்தார்.

13.12.02க்குப் பின் தலைவர் சபை நடவடிக்கைகளில் கலந்து கொள்ளவில்லை. கொழும்பிலிருந்து 24.12.02 திகதியிட்ட கடிதத்தில் தான் சுகவீனமுற்றிருப்பதாகவும், 3 மாத லீவு தருமாறும கேட்டிருந்தார்.

இம்மூன்று மாத கால எல்லையினுள் சபை காலாவதியாவதால் சபைக்குச் சொந்தமான வாகனத்தை ஒப்படைக்குமாறு கடித மூலம் கேட்கப்பட்ட போதும் பதில் தரவில்லை.

பின்னர் ஸ்ரீரங்கேஸ்வரன் தொலைபேசியில் தான் சுகவீனமுற்றிருப்பதால் இந்தியா சென்றுள்ளதாகவும், வாகனத்தின் பாதுகாப்புக்கருதி தமது கட்சியின் தலைமை அலுவலகத்தில் ஒப்படைத்திருப்பதாகவும் தொடர்பு கொண்டு வாகனத்தைப் பெற்றுக் கொள்ளுமாறும் தெரிவித்தார்.

ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி யாழ். மாவட்ட பொறுப்பாளர், செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா ஆகியோருடன் இது குறித்து தொடர்பு கொண்டும் பதில் இல்லை. என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-53)

## சீருடைக் கூப்பன்

(சில்லாலை)

சில்லாலை தெற்கு ஜே/149 கிராம அலுவலர் பிரிவிற்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான சீருடைக் கூப்பன் நாளை திங்கட் கிழமை மு.ப 10 மணிக்கு கிராம சேவகர் பணிமனையில் வைத்து வழங்கப்படவுள்ளது. (உ-58)

## மோதலின் பின்னணியில் இலங்கை அரசாங்கம்

### செல்வம் எம்.பி குற்றச்சாட்டு

(கிளிநொச்சி)

மன்னார்,பேசாலை மீனவர்களுக்கும் தமிழக மீனவர்களுக்கும் இடையில் இடம்பெற்ற மோதல் சம்பவங்களின் பின்னணியில் ஸ்ரீலங்கா அரசே உள்ளது என தமிழ் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் குற்றம் சாட்டியுள்ளார்.

அத்துடன், தமது பிரச்சினைகளை சர்வதேச சமூகத்திற்கு தெரியப்படுத்தும் நோக்குடன் நாளை திங்கட்கிழமை மாபெரும் பேரணி ஒன்றை நடத்த மன்னார் மாவட்ட மீனவர்கள் தீர்மானித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இம்மோதலிற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் பின்னணியில் இருக்கலாம எனவும் இந்திய மீனவர்கள் சந்தேகித்து வருவதாக இந்தியச் செய்திகள் கூறியிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.(உ-10)

## 35 தற்காலிக வீடுகள் மண்கும்பானில் அமையும்

(மண்கும்பான்)

மண்கும்பான் கிராம அபிவிருத்தி தொடர்பான முக்கிய கலந்துரையாடல் கடந்த வியாழனன்று அப்பகுதி கிராமசேவையாளர் தலைமையில் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் பாம் நிறுவன உயர் அதிகாரி,பாம் நிறுவன வெளிக்கள அதிகாரிகள் மற்றும் கியூடெக் நிறுவன உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

பாம் நிறுவன உயர் அதிகாரி அங்கு உரையாற்றுகையில், மண்கும்பானில் 35 தற்காலிக வீடுகள் அமைத்துத் தரப்படும் என உறுதியளித்தார்.

மேற்படி வீடுகள் தற்போது குடிசைகளில் வசித்து வரும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களுக்கு வழங்கப்படவுள்ளன.

இவ்வாறான தற்காலிக வீடுகள் கியூடெக் மற்றும் பாம் நிறுவன அனுசரணையுடன் அல்லைப்பிட்டி பகுதியில் அமை-க்கப் பட்டமை தெரிந்ததே.

மண்கும்பான் சந்தியை அண்டிய பிள்ளையார் கோயிலுக்கு சமீபமாக 25 வீடுகள் வீட்டுத் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டிருக்கின்றமையும் குறிப்பிடத் தக்கது. (உ-55)

### விளக்க மறியலில் உள்ள புலிகளின்

## பிணை மனுக்கள் மீதான —விசாரணை நாளை—

(திருகோணமலை)

திருகோணமலைக்கடலில் வைத்து கடற்படையினரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச சேர்ந்த அறுவரின் பிணை மனுக்கள் மீதான விசாரணை நாளை திங்கட் கிழமை கொழும்பு மேன்முறையீட்டு நீதி மன்றத்தில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

2002ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதலாம் திகதி இந்த அறுவரும் கைது செய்யப்பட்டபோது, இவர்கள் வசம் கிளைமோர்,கண்ணி வெடிகள் இருந்ததாக குற்றஞ்சாட்டப் பட்டிருந்தது. திருகோணமலை நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட இவர்கள் விளக்க மறியலில் வைக்கப்பட்டனர்.

ஆபத்தான ஆயுதங்கள் தொடர்பான சட்டத்தின் கீழ் கைது செய்யப் படுபவர்களுக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் பிணை வழங்க முடியும் என்பதால் அறுவர் சார்பிலும் தனித்தனியாக பிணை மனுக்கள் தாக்கல் செய்யப் பட்டுள்ளன.

பிரதிவாதிகளான திருகோணமலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, சட்டமா அதிபர் ஆகியோர் சார்பில் ஆஜராகியிருந்த அரச சட்டத்தரணி டீ.சில்வா பிணை வழங்கப்படுவதை ஆட்சேபித்து சத்தியக்கூற்று ஒன்றை பொலிஸ் பொறுப்பதிகாரி சார்பில் தாக்கல் செய்திருந்தார். இது தொடர்பான தீர்ப்பே நாளை வழங்கப்படவுள்ளது.

விடுதலைப் புலிகள் அண்மையில் தமது பகுதிக்குள் அத்துமீறி நுழைந்தனர் என்ற குற்றச் சாட்டில் கைது செய்திருந்த இராணுவ சிப்பாய் ஒருவரையும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரையும் தலைவர் பிரபாகரன் பணிப்பின் பேரில் நிபந்தனையின்றி விடுதலை செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ)

### குற்றத்தடுப்பு நகல் சட்டமூல எதிர்ப்பு

## வழக்கைவிசாரிக்க மூன்று நீதிபதிகள் கொண்ட குழு


(கொழும்பு)

திட்டமிட்டகுற்றச் செயல்களைத தடுப்பது சம்பந்தமான நலன் சட்ட மூலத்திற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரணை செய்வதற்கு மூன்று உயர் நீதிமன்ற நீதியரசர்களைக் கொண்ட குழுவொன்றை பிரதம நீதியரசர் நியமித்துள்ளார்.

பேராசிரியர் சிராணி பண்டாரநாயக்க, பி.எதிர்சூர்ய அசோக டி.சில்வா ஆகியோர் இக்குழுவில் அங்கம் பெறுகின்றனர்.

பாராளுமன்ற உறுப்பினர்களான ஜானக பண்டார தென்னக்கோன், சுனில் ஹந்துன்நெற்றி ஆகியோரும் இரு சட்டத்தரணிகளும் மேற்படி மனுவைத் தாக்கல் செய்திருந்தனர்.

மேற்படி நகல் சட்ட மூலத்தில் முன்வைக்கப்பட்ட சில யோசனைகள அரசியல் யாப்புக்கு முரணானது என்பதுடன், சட்டமூலத்தை நிறைவேற்ற பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெற பாராளுமன்றத்தில் கருத்துக்கணிப்பு நடத்தப்பட்ட வேண்டும் எனவும் அம்மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-8)



யாழ். மத்தியகல்லூரியின் வருடாந்த மெய்வல்லுநர் போட்டிக்கு பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்ட கல்லூரியின் பழைய மாணவரும், கண்காணிப்புக் குழு உறுப்பினரும், பிரபல சட்டத்தரணியும் பதில் நீதிபதியுமாகிய ஜனாப் எம்.எம். சபுறுடீனுடன் சிறப்பு விருந்தினராகக்கலந்து கொண்ட மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர் கு. சண்முகநாதனும், மேற்படி கல்லூரி அதிபரும் மாணவரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்பதைப் படத்தில் காணலாம்.

# பிறந்த திகதிக்குப் பொருந்தப் பெயரமைத்து சிறந்ததாக வாழ்க்கையைச் சீர் செய்யுங்கள்

## சோதிடபலன்

ஆர். ஐ. துரைமுருகர்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

### உடல் எண்~7 உயிர் எண்~4

7,16,25 போன்ற திகதிகளில் பிறந்து,பிறந்த திகதி, மாதம், வருடம் இம் மூன்றையும் கூட்டி வருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண் 4 வருமேயானால் இவர்கள் கேது, இராகு போன்ற ஆதிக்கத்தில் பிறந்தவராவர்.பார்பதற்கு ஓரளவு உயரமாகவும், எப்பொழுதும் தூய்மையாகவும் காட்சியளிப்பர். விலை உயர்ந்த ஆடையாக இல்லாவிட்டாலும் தான் அணியும் உடை எப்போதும் சுத்தமாக இருக்கவேண்டும என்று எண்ணுவர். கலகலப்பாகப் பேசும் இவர்கள் சில நேரங்களில் தனிமையில் சிந்தனை செய்து கொண்டேயிருப்பர். எல்லா வசதிகளும் பெற்று வாழ்க்கை அமைக்க எண்ணும் இவர்கள் திடீரென்று எல்லா இன்பங்களையும் புறக்கணித்துப் பேரின்பம் என்ற இறை வழியை நாடினால் என்ன என்று தனக்குள்ளே குழம்பிக்கொள்ளுவர்.

ஆனால் பெயர் பொருத்தமானதாக இவர்களுக்கு அமைந்து விட்டால் நல்ல ஆரோக்கியம்,நல்ல வாழ்க்கைத் துணைவர். நல்ல குழந்தைகள், வசதியான வாழ்க்கை அமையும். ஆனால் பெயர் நன்றாக அமையாது இவர்களுக்கு எதிர்ப்பான எண்களில் அமையுமேயானால் குடும்ப வாழ்க்கை குழப்பமானதாக அமைந்து ஆரோக்கியம் மன நிலைகெட்டு எல்லாமே சூன்யமாகத தெரிந்து பைத்தியம் போல் தனிமையில் பேசிக் கொண்டிருக்க நேரும். இதனால் பெயரை நல்ல எண்ணில் மாற்றம் செய்தால் சிறபபடையும். கலை ஞானம் கொண்ட இவர்கள் சங்கீதம், ஓவியம், நாட்டியம், ஜோதிடம், வைத்தியம், கை நுணுக்கத் தொழில் போன்றவற்றில் ஆர்வம் கொண்டிருப்பர். எதையும் முன் கூட்டி அறியும் ஆற்றல் இவர்களுக்கு இயற்கையில் உண்டு. தனக்கு நடக்க இருக்கும் கெட்ட செயல்கள் நல்ல செயல்களைக் கூட முன் கூட்டியே அறிந்து விடுவர். பிறரைப் பார்த்தவுடன் எடைபோட்டு விடும் தன்மையுடன் விளங்குவர்.

அதிகமான நண்பர்களுடன் பழகியிருந்தாலும் குறிப்பிட்ட சிலரைத் தான் நண்பராக ஏற்றுக் கொள்ளுவர். அன்புள்ளம் கொண்ட இவர்களுக்குத் திடீரென்று கோபம் வந்து உடனே தணிந்து விடும். சில நேரங்களில் ஆத்திரத்தில் எதையும் செய்து விட்டுப்பின் வருந்தி வேதனைப் படுவர். தான் செய்த தவறுக்கு ஆண்டவனிடம் மன்னிப்புக் கேட்பர். இந்த உலகிற்கு அப்பாற்பட்டுச் சிந்திக்கும் இவர்கள் திடீரென்று கனவுலகில் இருப்பர். தன் மனதில் பட்ட கருத்துக்களைச் சரமாரியாக முன்பின் யோசிக்காது கூறுவர். ஒளிவு மறைவு இல்லாது பேசும் இவர்கள் மனம் இளகியதென்றால் மிகையாகாது. பிறரை ஏமாற்ற நினைக்காத இவர்களை ஏமாற்றவும் முடியாது. சில நேரங்களில் விட்டுக் கொடுத்து விடுவர். இதைப் பலர் ஏமாந்து விட்டார் என்று நினைப்பதும் உண்டு.

கடவுளின் அருளைப் பெற்ற இவர்களுக்குவேதாந்தி என்ற பெரையும் சமுதாயம் கொடுத்து விடும. இந்த எண்ணிக்கையில் பிறந்த சில ஆண்கள் தாடியும்,முடியும் வெட்டாது தியானத்தில் ஆழ்ந்திருந்தால் தனி ஆனந்தம் உண்டாகும் என்று எண்ணிச் செய்தும் பார்ப்பர். பெயர் நன்றாக அமைந்த சிலர் வீடு,வாகனம், கலைக்கூடம்,பெரும் தொழில் செய்து வாழ்கின்றனர். இன்னும் சிலர் அரசாங்க உத்தியோகத்தில் முக்கியமான பதவிகளை வகிக்கின்றனர். எப்பொழுதும் நேர்மை, நீதி, சொல்லுறுதி கொண்டு வாழ்வர். எதையும் நிதானமாகச் செய்து நல்லபெயர் எடுப்பர். பலருக்கு உதவி செய்து தானும் உயர்வடைவர். பலர் போற்றும் மனிதர்களாக வாழ்ந்து புகழ், பணம் இரண்டிலும் உயர்ந்த நிலையை அடைவர்.

தனக்குப் பிடிக்காத காரியத்தை யார் செய்தாலும் வெறுப்பர். காந்த சக்தியும் தியான சக்தியும் கொண்ட இவர்கள் தன் திறமையை ஒழுங்காகட் பயனபடுத்தினால் தோல்வி காணாத வெற்றி வீரராக வாழலாம். நோயைக கூடத்தன் வழிபாட்டால் போக்கி விடலாம். இவர்களிடம் நாம் பேசும் போது திடீரென்று சிந்தனையில் மூழ்கி விடுவர். அடிக்கடி பிரார்த் தனையில் ஈடுபடுவர். ஆனால் பெயர் நன்றாக அமையாவிட்டால் வாழ் நாள் முழுவதும் துன்பப்பட வேண்டியிருக்கும்

முனனேற வழி கிடைத்தும் பயந்து பல விஷயங்களில் தோல்வியுறுவர். சிலர் குடும்ப வாழ்க்கையில் அவ்வளவு நாட்டம் காட்டுவதில்லை. இன்னும் சிலர் அழகான பொருட்களை வாங்கிச் சேர்ப்பதிலும் சாப்பாட்டுப் பொருள்களிலும் அதிக நாட்டமுடையவராயிருப்பர். மிதமாகச் சாப்பிடாவிட்டால் உடம்பு பெருத்து விடும். உடல் பயிற்சியும்,தியானப் பயிற்சியும் இவர்களின் உடம்பிற்கும் மனத்திற்கும் ஏற்றவையே. உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசத்தெரியாத உத்தமர்களென்றால் மிகையாகாது.

#### தொழில்

கலை சம்பந்தமான அனைத்துத் தொழிலாலும்,எழுத்தாலும்,பேச்சாலும், முன்னேறுவர். கமிஷன் ஏஜென்சீஸ்,வாகனங்கள், ஆடம்பரப் பொருடகள் புத்தகங்கள், பத்திரிகைகள் போன்றவற்றால் பொருளீட்டும் பாக்கிய முடையவர்கள்.

#### நோய்

வயிற்றுக் கோளாறு,இடுப்புவலி, முதுகுவலி,பல்வலி,வாதக்கடுப்பு, இரத்தக் கொதிப்பு, சர்க்கரை வியாதி போன்றவைகள் வரவாய்ப்பிருப்பதால் முன்கூட்டியே உப்பு, சர்க்கரை, கொழுப்புபோன்றவற்றைக் குறைத்துக் கொள்வது நலம்.

#### பெயர் அமைக்கும் முறை

இந்த எண்ணிக்கையில் பிறந்தவர்களுக்குச் சுக்கிர ஆதிக்கமான15,24,33,42,51,60,69 போன்ற எண்களில் பெயர் அமைத்துச் சிறப்படையலாம்.

#### பின்பற்றவேண்டியவை

யோகமான எண்-6,1. யோகமான திகதிகள்-6,15,24;1,10,19,28; 2,11, 20,29. யோகமான மோதிரக்கல் வைடூரியம், மூன்ஸ்டோன், கோமேதகம், டைகர்ஸ்ஐ.யோகமான நிறம்- பச்சை,மஞ்சள்,நீலம்.ஆகாத திகதி-9,18,27;8,17,26. ஆகாத நிறம்- சிவப்பு,கறுப்பு.

### உடல்எண்~7 உயிர் எண்~5

7,16,25 போன்ற திகதியில் பிறந்து பிறந்த திகதி ,மாதம், வருடம் ஆகிய இம் மூன்றையும் கூட்டி வருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண் 5 வருமேயானால் கேது, புதன் போன்ற ஆதிக்கத்தில் பிறந்தவராவர். சிந்தனா சக்தியும் சுறுசுறுப்பும் கொண்ட இவர்கள் தொழில் செய்து வாழ்க்கையில் உயர்ந்த இடத்தை வகிக்கின்றனர்.ஆனால் பெயர் பொருத்தமினறி அமைந்து விட்டால் பல்வேறு பிரச்சினைகளில் சிக்கித்தவிக்கின்றனர். பார்ப்பதற்கு ஓரளவு உயரமானவர்களாகவும் தன்னம்பிக்கை கொண்டவர்களாகவும் கண்ணியம் மிக்கவர்களாகவும் காட்சியளிப்பர். தனது முன்னேற்றத்திற்காக எப்பொழுதும் திட்டம் தீட்டிக் கொண்டே இருப்பர். தனது வருமானத்தைப் பெருக்குவதற்காகப் பல்வேறு வழிகளில் முயல்வர்.

பெயர் நன்றாக அமையப் பெற்றவர்கள் வெற்றிமேல் வெற்றி பெற்றுச் சிறப்புற்று வாழ்வர். ஆனால் பெயர் நன்றாக அமையாதவர்கள் குழபபமான குடும்ப வாழ்க்கையும், வீண் பிரச்சினைகளும், தொழில் தடங்கலும் ஏற்பட்டு வருந்தி வாழ்வர். பிறர் செய்கின்ற காரியங்கள் வேகமாக நடக்கா விட்டால் அவர்களைச் சோம்பேறி என்று திட்டுவர். எந்தக் காரியங்களும் துரிதமாக நடக்க வேண்டும் என்று எண்ணுவர். இவர்களுக்குப் பெயர் நன்றாக அமைந்து விடுமேயானால் பெரும் பணம் சம்பாதித்து விடுவர்.

ஆனால் வாழ்க்கையில் எவ்வளவு முன்னேறினாலும் மன நிலை அமைதி கொள்ளாது. இதனால் பலர் பக்திமானாக மாறி விடுகின்றனர். தனக்கு மிஞ்சிய ஒரு சக்தி இருப்பதாக எண்ணி அதைப் பற்றி ஆராய்வர். பிறருக்கு உதவும் மனப்பான்மை கொண்ட இவர்கள் தன்னை உயர்த்திக் கொள்ளத்தகுதியில்லாதவர்கள் பிறரை உயர்த்த முடியாது என்று கூறுவர்.

இவர்களுக்குப் பெயர் நல்ல எண்களில் அமைந்து விட்டால் வேகமாக முன்னேற்றத்தை நோக்கிச் செல்வர். அப்படிப் பெயர் பொருத்த மில்லாது போய் விட்டால் வாழ்க்கை தலை கீழாக மாறி விடும். இவர் களது மனம் நேர்மையைத் தவிரப் போலிகளை வெறுக்கும். கடவுள் நம்பிக்கை கொண்ட இந்த எண்ணிக்கைக் காரர்களுக்குப் புனித யாத்திரை செல்லுவதில் அதிகஆர்வம் இருகக்கும்.தான் செய்கின்றதவறைக் கூடத் தனிமையில் நினைத்து வருந்துவர். இந்த எண்ணிக்கைக்காரர்களில் பலர் வேலை பார்ப்பவர்களாகவும், சிலர் சொந்தத் தொழில் செய்பவர்களாகவும் விளங்குகின்றனர் .இவர்களது முன்கோபத்தைக் கண்டு பல நண்பர்கள் அஞ்சி ஒதுங்கி விடுகின்றனர். இவர்களது மனம் பெரிய தொழிற் கூடங்களையும் நீர் வீழ்ச்சிகளையும் நீர்த்தேக்கங்களையும் மலைப்பிரதேசங்களையும இரசிக்கக் கூடியது.

எந்த ஒரு புதுமையான பொருளைப் பார்த்தாலும் அதைப் பற்றிய ஆராயச்சியில் இறங்கி விடுவர். தைரியசாலிகள் போல் காட்சியளிக்கும இவர்கள் உளஹூரப்பயந்தவர்களே. தான் செய்கின்ற ஒவ்வொரு காரியங்களுக்கும் ஆண்டவன் தான் காரணம் என்று நம்புவர். ஏராளமான பொருளாதார வசதி இருந்தாலும் நம்மைப் போன்று பிறரும் வாழ்க்கையில் உயர வேண்டும் என்று எண்ணுவர்.

குறுக்குக்கேள்வி கேட்பதிலும் வேதாந்தம் பேசுவதிலும் சிறந்து விளங்குவர். சிலருக்கு இவர்களைப் பார்த்தவுடன் வெறுப்புத் தோன்றும். ஆனால் பிறருக்குத் தீங்குவிளைவிப்பவர் அல்லர்,சில நேரங்களில் தனது வாயால் தனக்கேகேடு விளைவித்துக் கொள்ளுவர்.ஆனால் பெயர் பொருத்தமானதாக அமைந்து விட்டால் ஏராளமான சொத்தோடு எல்லா வளமும் பெற்று வாழ்வர்.

இவர்கள் மனம்,சட்டம்,சமயம், கலை, இலக்கியம்,இசை, சோதிடம், மருத்துவம் இவற்றில் ஆராய்ச்சி கொள்ளும். அழகாக வீட்டை வைத்துக் கொள்ளுவதிலும் தான் வைத்திருக்கும் வாகனங்களை அழகாக வைத்துக் கொள்வதிலும் ஆர்வம் உள்ளவராக இருப்பர். பிறருக்கு உதவும் மனப்பான்மை கொண்ட இவர்கள் பிறருக்கு உதவி செய்யும் போது எந்தச் சிக்கலிலும் மாட்டிக் கொள்ளக் கூடாது என்று எண்ணுவர். ஆனால் பெயர் பொருத் தமானதாக அமைந்து விட்டால் படிப்படியாக வாழ்க்கையில் முன்னேறுவர். அப்படிப் பெயர் பொருத்த மின்றி அமைந்தால் பல்வேறு சோதனையில் மாட்டிக் கொண்டு திண்டாடுவர்.இதனால் பெயரைப் பொருத்தமான எண்ணில் அமைத்துக் கொள்வது அவசியம்.

#### தொழில்

எழுத்தாலும்,பேச்சாலும்,கமிஷன், ஏஜென்சீஸ் மூலமும் பொருளீட்டுவர். மருந்து,வாகனம், ஒப்பந்தம், மெற்றல் சம்பந்தமான தொழிலாலும், பச்சை நிறப் பொருட்களாலும் வாழ்க்கையில் உயர்வு உண்டு.

#### நோய்

பொதுவாக இந்த எண்ணிக்கைக் காரர்களுக்கு மனக் குழப்பம்,வாயு சம்பந்தமான கோளாறுகள், கண், காது, முதுகுவலி போன்றவைகள் வந்து நீங்கும்.

#### பெயர்அமைக்கும்முறை

இவர்கள் கீழே கொடுத்துள்ள புதன்,சுக்கிரன் ஆதிக்கமான 14,23, 32,41, 50,59,77; 15, 24,33,42, 60,69 போன்ற எண்களில் பெயரை அமைப்பது சிறப்பாகும்.

#### பின்பற்றவேண்டியவை

யோகமான எண்-2,5, 6. யோகமான திகதிகள்-2,11,20,29;5, 14,23;6,15,24. யோகமான மோதிரக் கல்-வைடூரியம்,டைகர்ஸ் ஐ,மூன்ஸ்டோன், வைரம். யோகமான நிறம்- பச்சை,மஞ்சள், சாம்பல்நிறம், இலேசான நீலம், ஆகாத திகதி-9,18,27 .ஆகாத நிறம் -சிவப்பு.

(தொடரும்)

---

## வெளிநாட்டில் பணிபுரிந்த 158 இலங்கையர் மரணம்

(கொழும்பு)

கடந்த 2001ஆம்ஆண்டு விபத்துக்கள் மற்றும் படுகொலைகளால் வெளிநாடுகளில் 158 இலங்கையர்கள் இறந்துள்ளனர்.

156பேர் விபத்துக்களாலும் இருவர் படுகொலை செய்யப்பட்டும் இறந்துள்ளனர் என தொழில் வேலை வாய்ப்பு அமைசசர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும் போதே தொழில் அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இவ்வாறு வெளிநாடுகளில் இறக்கும் இலங்கையரின் சடலங்களை தாய் நாட்டுக்கு கொண்டு வர சீரான திட்டம் அமுலாக்கப்படும் என்றும் இதற்கான செலவினங்களை அவர்களின எஜமானர்களே ஏற்றுக்கொள்வார்கள்.

எனினும்,தாமதம் ஏற்படும்பட்சத்தில்வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தலையிட வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (உ-8)

## தொண்டர் ஆசிரியர் நாளை முதல் உண்ணாவிரதத்தில் குதிப்பர்

(கொழும்பு)

திருகோணமலையிலுள்ள வடக்கு-கிழக்கு மாகாண கல்வி அமைச்சு அலுவலகம் முன்பாக மறியல் போராட்டம் நடத்தி வரும் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டதொணடர் ஆசிரியர்கள் நாளை திங்கட்கிழமை முதல் சாகும்வரையிலான உண்ணா விரதப் போராட்டம் நடத்தப்போவதாக அறிவித்துள்ளனர்.

கடந்த3ஆம் திகதி முதல் மறியல் மற்றும் சூழற்சி முறையிலான உணணாவிரதப் போராட்டத்தை இத் தொண்டர் ஆசிரியர்கள் நடத்தி வருகின்றனர்.

நாளை திங்கட்கிழமைக்கு முனனர் தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழகுவது தொடர்பான உறுதி மொழியை மாகாணக் கல்வி அமைச்சு எழுத்து மூலம் தரத் தவறும் பட்சத்தில் சாகும் வரையிலான உண்ணா விரதப்போராட்டத்தை ஆரம்பிக்கப் போவதாக மட்டக் களபபு, அம்பாறைமாவட்ட தொண்டர் ஆசிரியர் சங்க ஒன்றியத்தின் தலைவர்அறிவித்துள்ளார். (உ-8)

---

## சுயாதீனக் குழு அமைப்பு

(கொழும்பு)

மின்சார சபையின் தொழில் நுட்பத்துறைசார் ஊழியர்களின்சம்பள அதிகரிப்பு,பதவி உயர்வுகள் குறித்த கோரிக் கைகளை ஆராய்வதற்காக சுயாதீனக் குழு வொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இக் குழுவுக்கு சகல அதிகாரங்களும் வழங்கப்பட்டுள்ளதாக எரிபொருள மின்சக்தி அமைச்சு அறிவித்துள்ளது.

திறைசேரியின் முன்னாள் செயலாளர்பி.சி.பெரேரா இக்குழுவின் தலைவராகவும், ரொனி வீரக்கோன,குடாபண்டார வீர சூரிய ஆகியோர் ஏனைய உறுப்பினர்களாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.(உ-8)

## கோழித்திருட்டு

(கோப்பாய்)

கோப்பாய் இராச வீதிப் பகுதியில் மீண்டும் கோழித் திருட்டு அதிகரித்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (உ-79)

## கண்ணிவெடி அகற்றும் பணி

(திருநெல்வேலி)

படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள முகமாலை முதல் எழுதுமட்டுவாள் வரையிலான ஏ-9 பாதையின் இருமருங்கிலும் கண்ணிவெடி அகற்றும் பணி இடம் பெற்று வருகின்றது.

படையினரின் கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் இந்தப்பணியில் ஈடுபட்டு வருகின்றனர். (உ-43)

## உபகரணங்கள் வழங்கல்

(மானிப்பாய்)

கட்டுடை ஜே/140 கிராம சேவையாளர் பிரிவில் ஏ.-9 பாதை திறக்கப்பட்ட பின்னர் மீளக் குடியமர்ந்த மக்களுக்கான வீட்டு உபகரணங்கள் எதிர் வரும் 11ஆம் திகதி செவ்வாயக் கிழமை மு.ப.9 மணிக்குமானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தில் வைத்து வழங்கப்படவுள்ளன. (உ-252)

## விரிவுரைகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட 2,3,4,ஆம் வருடமாணவர்களுக்கான 2ஆம் அரையாண்டு விரிவுரைகள் நாளைதிங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## தீவக நிலை குறித்து பிரதமருக்கு மகஜர்

(நெடுந்தீவு)

புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டு ஒரு வருடம் கடந்துள்ள நிலையிலும் தீவுப் பகுதியில் எந்த வொரு இயல்பு நிலையும் ஏற்படாது இருக்கின்றமை குறித்தும் அதற்கு அங்கு தங்கியுள்ள கடற்படையினர் தடையாக விளங்குவது குறித்தும்,

நெடுந்தீவுப் பகுதி சனசமூக நிலையங்கள் ,கிராமஅபிவிருத்திச்சங்கங்கள்,பொதுஅமைபுக்கள்ஒன்றிணைந்து பிரதமர் ரணில்விக்கிரமசிங்கவுக்கு அண்மையில் மகஜர் ஒன்றினை அனுப்பிவைத்துள்ளனர். (உ-117,126)

## கசிப்பு உற்பத்தியாளர் கைது

(யாழ்ப்பாணம்)

நீண்டகாலமாக யாழ்ப்பாண சிங்கள மகாவித்தியாலத்திற்கு அருகாமையில் கசிப்பு விற்பனையில் ஈடுபட்டு வந்த இருவரை யாழ். பொலிஸார் நேற்று கைது செய்துள்ளனர்.

இவர்களிடம் இருந்து 47 போத்தல கசிப்பையும் மீட்டுள்ளனர். இவர் நாளை நீதி மன்றில் ஆஜர் படுத்தப்படவுள்ளனர். (உ-7)

## கூட்டம்

(சில்லாலை)

சங்கானை மேற்கு சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுககூட்டமும் புதிய நிர்வாகிகள தெரிவும் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப.5 மணிக்கு இடம்பெறவுள்ளது. (உ-58)

## கணனி வகுப்பு

(சில்லாலை)

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின 'முயற்சி' திறன்விருத்திப்பிரிவின் கீழ், சில்லாலையில் புதிதாகதிறக்கப்பட்டகிளையில் தற்போதுகணனி வகுப் புக்கள் ஆரம்பமாகியுள்ளன.

இக்கிளையில் தையல் வீட்டு மின இணைப்பு மீளமுறுக்குநர் பயிற்சி வகுப்புக்களும் இடம் பெற்று வருகின்றன. (உ-58)

## இன்று ஒரு தகவல்

### அர்த்தமே வேறுதான்!

சிலர் பேசுகின்ற வார்த்தை ஒருமாதிரியாக இருக்கும் அதன் அர்த்தம் வேறுமாதிரி இருக்கும்! ஆதலால், நாம் அவசரப்பட்டு ஒரு முடிவுக்கு வந்துவிடக் கூடாது. யோசித்துப் பார்க்கவேண்டும். இல்லையென்றால் விபரம் தெரிந்தவர்களைக் கேட்டு அதற்கு அர்த்தம் என்னவென்று கண்டுபிடிக்க வேண்டும். ஓர் ஊரில் ஒரு பெரியவர் இருந்தார். அவருக்கு மூன்று பிள்ளைகள். கடைசிக் காலத்தில் அவர் அந்த மூன்று பிள்ளைகளையும் அருகில் அழைத்து, மூன்று அறிவுரைகளைச் சொல்லிவிட்டுக் கண்ணை மூடிவிட்டார்.

''பெற்றதாய்க்குச் சோறு போடாதே!' இது ஒரு அறிவுரை. 'கொடுத்த கடனைக் கேட்காதே' இன்னொன்று. 'விதைத்த நிலத்துக்கு வேலிபோடாதே' மற்றொரு அறிவுரை. இவைகள் அறிவுரை மாதிரியா இருக்கின்றன? எல்லாம் ஏதோ ஒரு மாதிரியாக இருக்கின்றனவே? ஏன் அப்பா இப்படிச் சொல் கிறீர்கள்? என்று கேட்கலாமென்றால் அவர் அதற்குள்ளே கண்ணை மூடிவிட்டார்.

'சரி... அப்பா சொல்லிவிட்டுப்போன அறிவுரைகளுக்கு அர்த்தம் என்ன' என்று கண்டு பிடிப்போம் என்று சொல்லி அந்த மூன்று பிள்ளைகளும் ஆளுக்கு ஒரு அறிவுரையை எடுத்துக் கொண்டு விபரம் தெரிந்தவர்களைக் கேட்கலா மென்று வெளியே புறப்பட்டார்கள். ஒரு பெரியவர் வந்தார் அவரைப்பார்த்து விளக்கம் கேட்டார்கள். 'ஐயா! கொஞ்சம் நில்லுங்கள்... எங்கள் அப்பா சாகும் பொழுது பெற்ற தாய்க்குச் சோறு போடாதே' என்று சொல்லிவிட்டுப் போனார். அப்படியென்றால் என்ன அர்த்தம்? என்று கேட்டார்கள். அந்தப் பெரியவர் கொஞ்சம் யோசித்துப் பார்த்துவிட்டு விளக்கம் சொன்னார்.

'பெற்ற தாய்க்குச் சோறு போடாதே என்றால்... பொதுவாக வயதானவர்களுக்கு அடிக்கடி கோபம் வரும். மருமகளோ மற்றவர்களோ சோறுபோட்டால்... சீராகப் போட்டால்... ஐயோ குறைத்துப் போடுகிறார்களே தாராளமாகப் போட மனது வரவில்லையே என்பார்கள். தாராளமாகப் போட்டால்... ஐயோ இப்படி மாட்டுக்குக் கொட்டுவது மாதிரிக் கொட்டுகிறாளே' என்பார்கள் ஆகவே, எப்படிப் போட்டாலும் கோபம் வரும். அதனால் இவர்களுக்கு நாம் சோறு போடக் கூடாது. அவர்களாக எடுத்துப் போட்டுக் கொள்கிறமாதிரி அவர்களுக்கு முன்னால் வைத்து விடவேண்டும். அதுதான் புத்திசாலித்தனம். 'அதைத்தான் உங்கள் அப்பா பெற்ற தாய்க்குச் சோறுபோடாதே என்று சொல்லியிருக்கிறார்.' என்று அந்தப் பெரியவர் விளக்கம் கொடுத்தார்.

'சரி... அடுத்தபடியாக எங்கள் அப்பா கொடுத்த கடனைக் கேட்காதே' என்றாரே அது எப்படி?... நாங்கள் கேட்காமல் இருக்கமுடியுமா?...' என்றார்கள். பெரியவர் அதற்கு 'கொடுத்தகடனைக் கேட்காதே' என்றால்... கடனைக் கொடுத்துவிட்டு அதைக் கேட்டுவாங்குகின்ற அளவுக்கு நடந்து கொள்கிறவனுக்குக் கடன் கொடுக்காதே என்று அர்த்தம். கொடுத்த கடனைக் கேட்காமலே திருப்பிக் கொண்டு வந்து கொடுக்கின்ற நல்லவர்களைப் பார்த்துக் கடனைக்கொடுக்க வேண்டும். அது தான் உங்கள் அப்பா, கொடுத்த கடனைக் கேட்காதே!' என்று சொல்லியிருக்கிறார். என்றார்.

உடனே இவர்கள் அந்த மூன்றாவது விஷயத்தையும் சொல்லி விளக்கம் கேட்டார்கள். விதைத்த நிலத்துக்கு வேலி போடாதே! என்று கொன்னாரே அது எப்படி வேலி போடாமலிருக்க முடியும்? என்று கேட்டார்கள். 'ஏன் முடியாது நமது நிலத்தைச் சுற்றியிருக்கிற நிலத்துக்குச் சொந்தக்காரர்கள் எல்லாரும் நல்லவர்களாக இருந்தால் நமது நிலத்துக்கு வேலிபோடவேண்டிய அவசியம் இல்லையே. வேறு பாதுகாப்புத் தேவையில்லையே! அதனால், நல்லவர்களின் நிலத்துக்கு மத்தியில் நமது நிலம் இருக்கிறமாதிரிப் பார்த்துக் கொள்ள வேண்டும். அதுதான் அதற்கு அர்த்தம் என்றார். அந்தப் பெரியவர். அதற்குப் பின்னர் தான் இந்த பிள்ளைகளுக்கு அப்பா சொன்ன புத்திமதியின் பொருள் புரிந்தது.

ஒரு பெரியவர் இந்த உலகத்தைவிட்டுப் போகக் கூடிய நிலைமையில் இருக்கிறார். கட்டிலில் படுத்திருக்கிறார். சொந்தக்காரர்களையெல்லாம் அழைத்து ஆளுக்கு ஒரு புத்திமதி வீதமாகச் சொல்லிக் கொண்டே இருக்கிறார். அவர்கள் எல்லோரும் அருகில் வந்து அவர் சொல்லும் புத்திமதியைக் கேட்டுவிட்டுப் போகிறார்கள். கடைசியாக அவருடைய மனைவி அருகில் வந்தார். 'எனக்கு என்ன புத்திமதி சொல்லிவிட்டுப் போகிறீர்கள்?' என்று கேட்டார். 'உனக்கு எந்தப் புத்திமதியும் சொல்லவேண்டாம் என்று நினைக்கிறேன்' என்றார் அவர். ஏன் என்று கேட்டார் இவர். இதுவரையும் நான் சொன்ன எந்தப் புத்திமதியை நீ ஒழுங்காகக் கேட்டிருக்கிறாய் என்றார் அவர்.

*தென்கச்சி கோ. சுவாமிநாதன்*

# அடக்குமுறைக்கு எதிராக அனைத்து பெண்களும் ஒன்றுபடவேண்டும்

## மகளிர் தினத்தில் ஜனாதிபதி அறைகூவல்

(கொழும்பு)



மோதல்கள் மற்றும் வன்முறைகளற்ற சூழ்நிலையையே அனைத்து இன மக்களும் விரும்புகின்றனர்.

அத்தகையதொரு அமைதியான சூழ்நிலையை ஏற்படுத்த அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்.

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க வாழ்த்துச் செய்தியிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வாழ்த்துச் செய்தியில் மேலும், சமூக, பொருளாதார மற்றும அரசியல் துறைகளில் பெண்களின் பங்குகள் அதிகரித்து வருகின்றபோதிலும், அவர்களுக்கு எதிரான வன்முறைகளும், அடக்கு முறைகளும் குறையவில்லை என்பதை நினைத்துப்பார்க்கும் போது கவலையாகவுள்ளது.

கடந்த காலயுத்தங்களின் போது வன்முறைகள் மற்றும் அடக்கு முறைகள் காரணமாகவும் பெண்களே அதிகம் பாதிக்கப்படுகின்றனர்.

அரசியல் பேதங்களை மறந்து அனைத்து இனப்பெண்களும் இனி வருங்காலத்தில் ஒன்றுபட வேண்டும்.

பெண்களில் அனேகமானோர் வறுமை உட்பட பல்வேறு பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

இவற்றைக் கருத்தில் கொண்டு பெண்களின் சமூக பொருளாதார நலன்களை பாதுகாக்கும் நோக்கில், நடவடிக்கைகள் மேற்கொள்ளப படவேண்டும் என அச்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-8)

# ஜி.ரி.சற். நிறுவனம் குடாநாட்டில் மேலும் 800 வீடுகளை நிர்மாணிக்கும்

(தென்மராட்சி)

ஜி.ரி.சற் நிறுவனம் யாழ்ப்பாணத்தில் மேலும் 800வீடுகளை நிர்மாணிக்கும் திட்டங்களை அமுல் செய்வதற்கு முடிவு செய்துள்ளது.

இது தொடர்பானகூட்டம்நேற்று முன்தினம யாழ். அரச செயலகத்தில உதவி திட்டமிடல் பணிப்பாளர் செ. மகாலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் ஜி.ரி. சற் நிறுவனப் பிரதிநிதிகளும், பிரதேச செயலர்களும் பங்கு கொண்டிருந்தனர்.

இதனடிப்படையில், ஊர்காவற்றுறை, வேலணை, நல்லூர், சங்கானை, உடுவில், பருத்தித்துறை, தெல்லிப்பழை, கோப்பாய் ஆகியபிரதேச செயலர் பிரிவுகளில் தலா 50 வீடுகள், தென்மராட்சி, மருதங்கேணியில் தலா 175 வீடுகள்என்ற அடிப்படையில இவ் 800வீட்டுத்திட்டம் அமையவுள்ளது.

இத்திட்டத்துக்கான பயனாளிகள தெரிவுகள் மிகவிரைவில் அவ்வப் பிரதேச செயலகப் பிரதேசங்களில் இடம்பெறவுள்ளது.

இவ்வீட்டுத்திட்டங்களை மாதிரிக் கிராமம் அமைப்பதற்கான ஏற்பாடுகளும் செய்யப்படும் எனவும் அறியப படுகின்றது. (உ-77)

### சீனக் கப்பல் வீட்டுச்சென்றது

# பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய இரசாயன கொள்கலன் என்பது உறுதியானது

(கொழும்பு)

எஸ்.ரி.கிறான் என்ற சீனக் கப்பலில் இருந்து அண்மையில் கொழும்புத்துறைமுகத்தில் தரை இறக்கப்பட்ட கொள்கலன்களில் இருந்த இரசாயனக் கொள்கலன்கள் பாதிப்பு ஏற்படக்கூடியவை என்று மத்திய சுற்றாடல் அதிகார சபை அறிவித்துள்ளது.

இக் கொள்கலன்களை சுத்தப் படுத்துவதற்கோ அல்லது அப்புறப் படுத்துவதற்கோ போதிய வசதிகள் இங்கு இல்லை எனவும் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் சுற்றாடல் மோசடி கட்டுப்பாட்டுப்பிரிவின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இக்கொள்கலன்களைச் சுத்தப்படுத்தக் கூடிய வசதிகள் உள்ள ஒரு நாட்டுக்கு இக் கொளகலனகளை அனுப்பிவைக்க நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அதிகாரசபை அறிவித்துள்ளது.

கடந்த 15ஆம் திகதி இக் கொள்கலன்களை ஏற்றிக்கொண்டு ஈராக் நோக்கிச் சென்று கொண்டிருந்த சீனக் கப்பல் தீ விபத்து ஏற்பட்டதும் அதன் காரணமாக இக்கப்பலில் இருந்த கொள்கலன்கள கொழும்புத துறைமுகத்தில் தரை இறக்கப்பட்டு களஞ்சியப்படுத்தப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. (உ-8)

## இராசி பலன்

**09.03.2003**

**(மாசி 25, ஞாயிறு)**

| | |
|---|---|
| சஷ்டி | மு.இ 7.21வரை |
| கார்த்திகை | பி.இ 1.50வரை |
| இராகுகாலம் | 4.54 - 6.29 |
| நல்லநேரம் | 9.24 - 10.54 |

**சஷ்டி விரதம், கார்த்திகை விரதம்**

**மேடம்**
காரிய தாமதம், மனச்சஞ்சலம், தனவிரயம், மாதர் நட்பு.

**இடபம்**
கௌரவம், வெகுமானம், தெய்வசிந்தை, முயற்சி பலிதம்.

**மிதுனம்**
சோம்பல், கீழ்ப்படிவு, தனவிரயம், வாக்குமேண்மை.

**கடகம்**
தடைப்பட்ட காரியம் கைகூடும், குடும்ப சுகம், மகிழ்ச்சி, தெய்வதரிசனம்.

**சிங்கம்**
பெரியோரால் மதிக்கப்படல், காரியச்சித்தி, அதிகாரம், புதியசிந்தை.

**கன்னி**
மனப்பயம், ஆரோக்கியக் குறைவு, முயற்சி தாமதம், எதிர்பாராத நன்மை.

**துலாம்**
கலகம், பொருள் விரயம், காரியத் தடங்கல், வாகனபயம்.

**விருச்சிகம்**
குடும்ப மகிழ்ச்சி, சயனசுகம், கௌரவம், நண்பர்கள் சந்திப்பு.

**தனுசு**
சுவாரஸ்யம், போசனசுகம், சகோதரர் உதவி, முயற்சி பலிதம்.

**மகரம்**
கரிய தாமதம், சிறுவியாதி, கௌரவக் குறைவு, மனச்சோர்வு.

**கும்பம்**
ரோகபயம், மனச்சஞ்சலம், விருந்துபசாரம், பிரயாணம்.

**மீனம்**
நல்ல முயற்சி, திடமான சிந்தை, காரிய நன்மை, பொருள்சேர்க்கை.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

**- வளவன்.**

### கைதிகளை விடுதலை செய்க

# ஜனாதிபதி சந்திரிகாவிற்கு யாழ். ஆயர் அவசர கடிதம்

(யாழ்ப்பாணம்)

களுத்துறைச் சிறைக்கைதிகளின் விடுதலையை விரைவு படுத்த, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று, யாழ் ஆயர் அதி.வணக்கத்திற்குரிய தோமஸ் சௌந்தரநாயகம அடிகளார் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் நேற்று முன்தினம் ஜனாதிபதிக்கு அவரச கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளார்.

அக்கடிதத்திலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

களுத்துறைச்சிறைக் கைதிகளின் விவகாரம் நீண்டகாலப் பிரச்சினையாக உள்ளது. சந்தேகத்தின் பேரில் தென்பகுதி சிறைகளில் தடுத்த வைக்கப்பட்டிருப்போரை வடக்கு - கிழக்கு சிறைக்கு மாற்றி விசாரணைகளை துரிதப்படுத்தி விடுதலையை விரைவுபடுத்த வேண்டும்.

கைதிகளின் இளமைக் காலம் வீணே சிறைகளில் கழிவதால், அவர்களின் உரிமைகள் இழக்கப் படுகின்றன. வேதனையின் மத்தியில் அவர்களின் காலங்கள் நகர்கின்றன.

புரிந்துணர்வு உடன்படிக்கைக்குப் பின்னர் விடுதலைப் புலிகள் நாட்டின் எல்லாப் பாகங்களிலும் நடமாடுகின்றனர். ஆனால் புலிகள் என சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்கள் விடுதலை செய்யப்படாதமை வேதனை அளிக்கின்றது.

எனவே இவ் விடயத்தில் தாங்கள ஈடுபட்டு கைதிகளின் விடு தலையை விரைவுபடுத்துவதன் மூலம் சமாதானதின் ஒருவெளிப் பாடாக அதனை தமிழ் மக்கள் நம்புவார்கள் என்றும் அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடிதத்தின் பிரதிகள் பிரதமர், பாதுகாப்பு அமைச்சர் ஆகியோருக்கும அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (இ)

### மூலதன நன்கொடை வழங்கல்

(தென்மராட்சி)

வேலணை பிரதேச சபைக்குட்பட்ட சனசமூக நிலையங்களின் பொதுக் கூட்டமும் மூலதன நன்கொடை வழங்கும் வைபவமும் எதிர்வரும் 10ஆம் திகதி திங்கட்கிழமை வேலணை பிரதேசசபையில் நடைபெறவுள்ளது.

பிரதேச சபையின் செயலாளர் எஸ்சண்முகராஜா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரீ.வீகிருஸ்ணசாமி சிறப்பு விருந்தினராகப் பங்கு கொள்ளவுள்ளார். (உ-77)

*கொலை மேற் கொண்டாரிற் கொடிதே அலை மேற் கொண்டு அல்லவை செய்தொழுகும் வேந்து.*

*–குறள்–*

# வலம்புரி

## பகிரங்க அறிவிப்பு

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகளின் போது ஐந்து சுற்றுப் பேச்சுக்களில், மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் பற்றிப் பேசியுள்ளோம். உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசத்தில் மக்கள் மீளக் குடியமர்வதற்குஅனுமதிக்காமல் அன்றாடப் பிரச்சினை தீர்ந்து விட்டதெனக் கருத முடியாது. இவ்வாறு விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களின் சந்திப்பின் போது கூறியுள்ளார்.

அவர் கூறிய கருத்தில், பல முக்கிய விடயங்கள் அடங்கியுள்ளன. அதில் குறிப்பாக, உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாக இந்தியாவின் முன்னாள் இராணுவத் தளபதி சதீஸ் நம்பியாரின் அறிக்கையைப் பற்றி நாம் அதிகம் அலட்டிக் கொள்ளவில்லை. ஏனெனில் தமிழர்களின் தாயகத்தில் மக்கள் தத்தம் சொந்த இடங்களில் மீளக் குடியமர்வதற்கு எவரும் தடை போட முடியாது. இராணுவத்திற்குப் பாதுகாப்புத் தேவையாயின் மாற்று வழியைத் தேட வேண்டும் என கலாநிதி அன்ரன் பாலசிங்கம் வெளிப்படையாகக் கூறியுள்ளார்.

அவர் கூறிய கருத்தில் இன்னுமோர் முக்கிய விடயம் இடம் பெற்றுள்ளது. அதாவது, விடுதலைப் புலிகள் ஆயுதத்தைக் கைவிடுவது பற்றியதே அதுவாகும். தமிழர்களின் உரிமைகள் சரியான முறையில் வரையறுக்கப்பட்டு நிரந்தர சமாதானம் ஏற்பட்ட பின்னரே ஆயுதங்களைக் கீழே வைப்பது பற்றிப் பரிசீலிக்க முடியும். புலிகள் ஆயுதங்களைக் கையளித்த பின்பே உயர் பாதுகாப்பு வலயத்தில் மக்களை மீளக்குடியமர்த்த வேண்டும் என்ற கருத்துக்கு இடமே இருக்க முடியாதெனறும் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் ஐயந்தெளிவுறக் கூறியுள்ளார். அவரின் கருத்தை அரச தரப்பினர் மிக நிதானமாகப் பரிசீலிக்க வேண்டும். ஏனெனில், இந்திய முன்னாள இராணுவத்தளபதி சதீஸ் நம்பியாரின் அறிக்கை எவ்வாறு அமையும்என்பது ஒரு புறமிருக்க. அவ் அறிக்கையை ஏற்பதும் ஏற்காமல் விடுவதும் அரசின் கைகளிலேயே உள்ளது.


ஆயுதங்களை புலிகள் கைவிட்ட பின்னரே உயர் பாதுகாப்பு வலயத்தில் மக்களை மீளக் குடியமர்த்த வேண்டும் என நம்பியாரின் அறிக்கை முன் மொழியுமாயின்அதனை அரசு ஏற்றுக் கொள்ளுமாயின் சமாதானத்தை நகர்த்த முடியாது போய் விடும்.

எனவே, கலாநிதி அன்ரன் பாலசிங்கம் பகிரங்கமாகத் தெரிவித்த கருத்தை அரசு சரியான முறையில் பரிசீலிக்க வேண்டும்.

மாறாக இந்தியாவின் கட்டுக்குள் இருந்து கொண்டு சதீஸ் நம்பியாரின் அறிக்கை தான் வேதமந்திரம் என அரசு எண்ணுமாயின், சமாதான முயற்சியில் அரசு வெற்றி அடைய முடியாமல் போவதுடன், அண்டை நாடுகளின் ஆக்கிரமிப்புக்கும் ஆளாக நேரிடும்.

# தவக்காலத்தில் இயேசுவின் பாடுகளை நினைத்து மனந்திரும்பி நற்செய்திகளை ஏற்றிடுவோம்

எம்முடைய வாழ்வு வளமாக அமைவதற்கும், எம்முடைய செயற்பாடுகள் சரியானதாக இருப்பதற்கும் மீளவும் எம்மையும், எமது செயற்பாடுகளையும், சீர்தூக்கிப் பார்க்கின்றபோது எமது தவறுகள் குறைபாடுகள் எல்லாவற்றையும் திருத்திக் கொள்ள எமக்கு வாய்ப்புக்



கிடைக்கின்றது. இல்லையேல் ஏற்பட்ட பிழையோ குறைபாடோ முடிவு வரை தொடர்ந்து வந்துகொண்டேயிருக்கும் என்பது நாம் கண்ட அனுபவ உண்மையாகும். இந்நிகழ்வானது எம் உலகியல் வாழ்வுக்கும், ஆன்மீக வாழ்வுக்கும் பொருந் தும். திருச்சபை தனது இறை மக்களை மீளவும் திரும்பிப்பார்த்து பிழைகளில் இருந்து திருந்தி வாழ்வதற்கு ''தவக்காலம்'' என்ற காலப்பகுதியைத் தந்துள்ளது. இக்காலப்பகுதியில் எம்பாவங்களுக்காகத் தம்முயிரைக் கொடுத்து மீட்பளித்த இறை யேசுவின் பாடுகளைத் தியானித்து நாம் வாழ்வு பெறுவதற்கு அரிய சந்தர்ப்பமாக நாம் ஒவ்வொருவரும் பயன்படுத்திக கொள்ளவேண்டும்.

### மனம் மாறி நற்செய்தியை நம்புங்கள்

இயேசு திருமுழுக்குப் பெற்ற பின்னர் பாலைவனத்தில்சென்று 40

## பரமபிதா காட்டிய பாதை

நாட்கள் நோன்பிருந்து தவமிருந்து தாம் தொடங்கப் போகும் பகிரங்கப்பணிக்கு தந்தையாம் இறைவனுடன் ஒன்றித்திருந்தார். கலிலேயாவில் யேசு தம் பணியைத் தொடங்கிய போது ''காலம் நிறைவேறிவிட்டது. இறையாட்சி நெருங்கி வந்துவிட்டது. மனம் மாறி நற்செய்தியை நம்புங்கள்'' (மாற் 1:15) என்று மக்களுக்கு அழைப்பு விடுத்தார். அவ்வழைப்பையே அன்னையாம் திருச்சபையும் தனது இறை மக்களுக்கு விடுக்கின்றது. தவக்காலம் மனமாற்றத்தின் காலம். மன்னிப்பின் காலம். திருந்தி வாழும் காலம். புனித வாழ்வின் காலம். இக்காலத்தை தகுந்த முறையில் நாம் பயன்படுத்த எம் வார்த்தையாலும், வாழ்வாலும், முன்மாதிரிகையான ஈகைச் செயல்களாலும் ஒறுத்தல் உபவாசத்தினாலும் எம்மை நாம் கட்டுப்படுத்தி இறை ஆவியின் ஏவுதலுக்கு ஏற்ற பரிசுத்த வாழ்வை மேற்கொள்ள முயற்சி செய்ய வேண்டும்.

உலகத்தின் போக்குகளும் அதன் மாயைக் கவர்ச்சிகளும், அநீதச் செயற்பாடுகளும், சுயநலப் போக்குகளும் எம்மை நெருங்கிவிடாமல் பாதுகாப்பதுடன் எம்மைச் சூழவுள்ளவர்களும் இவற்றின் பாதிப்புக்கு இலக்காகாமல் எம்மால் இயன்ற அறிவுரைகளைக் கூற முன்வர வேண்டும் உப்பாக ஒளியாக, உண்மைக்குச் சான்றாக எப்போதும் நாம வாழ வேண்டும் எம் மீட்பராம் யேசுக் கிறீஸ்து கற்றுத் தந்த வழிமுறை களை எவ்வேளையிலும் நாம் விலக விடாது நமதாக்கிக் கொள்ள வேண்டும் அநீதியான தீர்ப்புக்களுக்கும் செயற்பாடுகளுக்கும் துணிந்து குரல் கொடுக்க வேண்டும். இல்லையேல் நாம் அநீதியானவர்களாக எண்ணப்படுவோம்.

மறைநூல் அறிஞர் போலன்றி இயேசு அதிகாரத்தோடு கற்பித்து வந்தார் என்று நற்செய்தி கூறுகின்றது. இன்று சாய்கின்ற பக்கம் சாய்கின்ற இறை பணியாளர்கள் அநீதியானவற்றுக்கு ஆமாப் போடும் பணியாளர்கள். நிர்வாகப் பணியாகச் செய்ய விரும்பும் பணியாளர்கள் அதிகரித்துக் கொண்டு செல்கின்றார்கள். இவைகள் எல்லாம் இறை மக்களை நம்பிக்கை இழக்கச் செய்யும் செயற்பாடுகளாகும். எத்தனை இயலாதவரை, இல்லாதவரை கைதூக்கிவிட நாம் முன்வருகின்றோம். பரிசேயரைப் போன்று பணம் படைத்தவர்கள் பக்கம் பரோபகாரம் செய்ய விளைகிறோம். தேவை அறிந்து செயல்படுகின்றோமா? தேவையறிந்தும் வாழாவிருக்கின்றோமா? வரட்டுக் கௌரவங்களும், வச்சுர எண்ணம் கொண்டவர்களாக வாழ்கின்றோமா?

இறைவன் நோவாவுடன் செய்த உடன்படிக்கைக்கு அடையாளமாக

**அன்ரனி பீற்றர்**

வானவில்லை வைத்தார். இறைவன் எம்முடன் செய்த உடன்படிக்கைக்கு சிலுவையை அடையாளமாக்கினார். சிலுவை வழி செல்ல எத்தனை பேர் முனைகின்றோம். சிற்றின்ப வழி செல்ல எத்தனை பேர் துடிக்கின்றோம். ஏற்புடைய காலமிதுவே மீட்பின் நாட்களும் இதுவே மனம் திரும்புவோம்.

# வெற்று ஞானிகள் பயந்தாங் கொள்ளிகளாவர் விஞ்ஞானியோ எதற்கும் பயப்படமாட்டான்

**பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் 168 ஆவது பிறந்த நாள் விழா இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் மிஷனின் சமயப் பாடசாலையால் இன்று கொண்டாடப்படுகிறது. பிரதம விருந்தினராக இலங்கைக்கான இந்தியக் ஹைக்கமிசனர் நிருபம் சென் கலந்து கொள்கிறார்.**

ஆனந்தம் மூன்றுவகையானது. விஷயானந்தம், பஜனானந்தம், பிரம்மானந்தம் எதில் எல்லோரும் ஈடுபட்டிருக்கிறார்களோ? பெண், பொன், ஆனந்தமே விஷயானந்தம். இறைவனுடைய பெயரையும் புகழையும் பாடுவதால் ஏற்படும் பிரம்மானந்தத்தை அடைந்த பண்டைய முனிவர்கள் மரபுகளுக்குக் கட்டுப் படாது அவற்றினின்றும் விடுதலையடைந்து, ஜீவன் முக்தர்களாகி தங்கள் விருப்பம் போல் வாழ்ந்து வந்தனர். பிரார்த்தனை செய். இறைவன் கருணையே வடிவானவர். பக்தர்களுடைய பிரார்த்தனைக்கு செவிமடுக்க மாட்டானா? அவன் கற்பக மரமாயிற்றே! அவனிடம் யார் எதை விரும்புகிறார்களோ அதைப் பெறுகிறார்கள்.

பிரம்மஞானம் கிடைத்த பிறகும் இறைவன் நான் என்ற எண்ணத்தைச் சிறிது வைத்து விடுகிறான். அது 'நான் பக்தன்', 'நான் விவேகி' என்பது அந்த நிலையில் இறைவனது லீலையைக் கண்டுகளிக்க முடிகிறது. உலக்கை தேய்ந்து உளிப்பிடியாயிற்று யது வம்சத்தை அளிப்பதற்கு அந்தச் சிறு பகுதியே போதுமானதாக இருந்தது. ஆகவே தான் இந்த உலகத்தை உண்மையாக அனுபவிப்பதற்கும் 'நான் பக்தன்', 'நான் விவேகி' என்பதை விஞ்ஞானி தன்னிடம் வைத்திருக்கிறான்.

### அருவ உருவக் காட்சி பெற்றவர்

பண்டைய முனிவர்கள் பயந்த சுபாவம் உடையவர்களாக இருந்தனர். பிறரைப் பற்றிக் கவலைப்படுவதனால்

**–ஸ்ரீஇராமகிருஷ்ணர்**

என்ன பயன்? நான் எப்படியாவது முத்தியடைய வேண்டும். மீண்டும் இந்த உலகத்திற்கு திரும்பி யார் வருவார்கள்? என்பது தான் அவர்களுடைய எண்ணம். நாரதர் முதலியவர்களோ உறுதியான விஞ்ஞானிகள். முனிவர்களை விட சக்தி வாய்ந்தவர்கள். வெற்று ஞானிகள் சரியான பயந்தாங் கொள்ளிகள். விஞ்ஞானியோ எதற்கும் பயப்பட மாட்டான். அவன் இறைவனின் அருவம், உருவம் என்பதான் இரு காட்சிகளையும் பெற்றவன். இறைவனோடு பேசியிருக்கிறான். இறைவனுடைய ஆனந்தத்தை பருகி மகிழ்ந்திருக்கிறான். இடைவிடாத இறை நினைப்பினால் மனதை எல்லையற்ற இறைவனிடம் ஒன்ற வைப்பதனால் கிடைப்பது ஆனந்தமே! அல்லது மனதை இறைவனிடம் ஒன்று படுத்தாமல் இறைவனுடைய லீலையிலேயே ஈடுபடுத்தியிருந்தாலும் ஆனந்தமே கிடைக்கிறது.

ஞானியின் வழி சலிப்பு மிகுந்தது. விசாரம் செய்து திரும்பத் திரும்ப இது அல்ல, இது அல்ல என்கிறான். இந்த உலகம் ஒரு கனவைப் போன்றது என்கிறான். என்வழி அப்படி அல்ல. நான் எல்லாவற்றையும் ஒப்புக் கொள் கின்றேன். நான் இரண்டு கைக ளையும் தூககிக் கொண்டு நிற்ப வன். நான் அக்குளில் எந்தப் பொரு ளையும் மறைத்து வைத்துக் கொண்டு இருக்கவில்லை. இரண்டு கைகளையுமே விட்டு விட்டேன். எனக்கு எந்தப் பயமும் இல்லை. அதனால் தான் நான் நித்தியம், லீலை இரண்டையும் ஒப்புக் கொள் கின்றேன்.

**ஸ்ரீராமகிருஷ்ணர் 'ஞானிக்குப் பெயரிலும், புகழிலும் பற்று இருப்பது காரணமாகவும் முக்தி அடைய வேண்டும் என்ற ஆசை காரணமாகவும் இரண்டு கைகளையும் மேல் தூக்கி நடனமாட முடிவதில்லை! நித்தியம், லீலை இரண்டையும் இவர்களால் ஒப்புக் கொள்ள முடிவதில்லை. அஞ்ஞானத்தில் சிக்கி விடுவோமோ என்ற அச்சம் எழுகிறது. ஆனால் விஞ்ஞானிக்கு எந்த அச்சமும் இல்லை என்கிறாரா?'**

## தினசரி தியானம்

### கர்மயோகத்தின் இரகசியம்

பகவான் புத்தர், சங்கராச்சாரியார் மற்றும் முற்காலத்திய கர்மயோகிகள் செய்திருக்கும் மேலானதும், மகிமை பொருந்தியதுமான வேலையைப் பார். தலைமுறை தலைமுறையாக அவர்கள் பெயர்கள் வழங்கி வருகிறது. அவர்களை உலகம் முழுவதும் மரியாதையுடன் வணங்குகிறது. ஏன்? அவர்களுடைய செயலில் ஒரு சிறிதும் சுயநலம் இல்லை.

கர்மயோகத்தின் இரகசியத்தை அறிந்து கொள். அதன்படி செய். வேலை துக்கத்தை உண்டாக்காது. அதன் மேல் கொண்ட ஆசையே துக்கத்திற்கு அடிப்படை. சுயநலமின்றிக் காரியங்கள் செய். தெய்வப் பெற்றி எய்துவாய். இதுவே ஞானம்.

**சுவாமி சிவானந்தர்**

# ஒப்புதல் வாக்கு மூலத்தை சாட்சியமாக ஏற்க முடியாது

## நீதிபதி தீர்ப்பு

(கொழும்பு)


காலம் சென்ற கலாநிதி நீலன் திருச்செல்வம் பற்றிய தகவல்களை சேகரித்து அவற்றைப் புலிகளிடம் வழங்கிவந்ததாக குற்றஞ்சாட்டப்பட்ட மகாலிங்கம் முரளிதரன் பற்றிய வழக்கு விசாரணை நேற்று முன்தினம் வெலிக்கடை விசேட நீதி மன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, எதிரியின் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சியமாக ஏற்றுக் கொள்ள முடியாதென நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது

எதிரி தனது சொந்தக்கையெழுத்தில் பொலிஸ் அத்தியட்சகர் ஒருவர் முன்னிலையில் தமிழில் எழுதி ஒப்படைத்த ஒப்புதல் வாக்குமூலத்தை ஏற்பதா? இல்லையா? என்பது பற்றி நீதிபதி சுனில் ராஜபக்ஷ தனது தீர்ப்பை வழங்கியுள்ளார்.

இந்த வாக்கு மூலம் சட்டத்திற்கு அமைவாகப் பெறப்பட்டிருக்கவில்லை. சுயமாகவும், சுதந்திரமாகவும் சிந்தித்து வாக்களிப்பதற்கு எதிரிக்கு வழங்கப்பட்டிருந்த ஒன்றரை மணி நேரம் போதாது என்று தனது தீர்ப்பில் நீதிபதி தெரிவித்துள்ளார்.

ஒப்புதல் வாக்குமூலம் நிராகரிக்கப்பட்டதையடுத்து எதிரியை விடுதலை செய்ய வேண்டுமென சட்டத்தரணி எம்.ஸ்ரீகாந்தா கேட்டுக் கொண்டதுடன், சந்தேகக் குறியீடுகள் கொண்ட சில தாள்கள் மட்டுமே இப்பொழுது சான்றுகளாக உள்ளன. இவை போதுமானவை அல்ல என அவர் எடுத்துக்கூறினார்.

மேற்படி கோரிக்கையை பரிசீலிப்பதற்கு தனக்கு சிறு கால அவகாசம் தேவையென அரச சட்டத்தரணி தெரிவித்ததையடுத்து விசாரணை இம்மாதம் 13 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (உ)



காங்கேசன்துறையில் உள்ள வட பிராந்திய பொலிஸ் மா அதிபர் காரியாலயத்தில் பொலிஸ் உத்தியோகத்தர்கள் சத்தியப் பிரமாண நிகழ்வில் இடம் பெற்ற சில காட்சிகள்
படங்கள்: சதீபன்

வடக்கு...

காணப்பட்ட 7 திட்டங்களை மேற்கொள்ள 963 மில்லியன் ரூபாவும,

மட்டு.மாவட்டத்தில் இனம் காணப்பட்ட 188 திட்டங்களை மேற்கொள்ள 1,570 மில்லியன் ரூபாவும; அம்பாறை மாவட்டத்தில் இனம் காணப்பட்ட 95 திட்டங்களை மேற் கொளள 309 மில்லியன் ரூபாவும; திருகோணமலை மாவட்டத்தில் இனம் காணப்பட்ட 51 திட்டங்களை மேற்கொள்ள 90 மில்லியன் ரூபாவும் ஒதுக்கத் திட்டமிட்பட்டுள்ளது.யாழ்.மாவட்டத்தைப் பொறுத்தவரையில் யாழ. ஆஸ்பத்திரி, சாவகச்சேரி ஆஸ்பத்திரி, தெல்லிப்பழை புற்றுநோய் ஆஸ்பத்திரி ஆகியவற்றிற்கு 490 மில லியன் ரூபா ஒதுக்குவதற்கு சிரான் கூட்டத்தில் தீர்மானிக்கப் பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல்வேறு சந்தர்ப்பங்களில் சிரான் கூட்டம் நடை பெற்றபோது நிதி ஒதுக்கீடு தொடர்பாக முதற் தடவையாக இப்பொழுதுதான் விப்ரம் வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

### புலிப் போராளிகள்....

நடை பெறும் போது இவர்களைப் பிணையில் விடுவது தொடர்பாக ஆட்சேபம் தெரிவிப்பதில்லை என சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்திருந்ததையடுத்தே இவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## கண்காணிப்புக்குழு முக்கிய சந்திப்பு

(கொழும்பு)

இராணுவத்தினரின் யுத்த நிறுத்த மீறல்கள் தொடர்பாக யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் புதிய தலைவரும் பதவி விலகிச் செலலும் தலைவரும் நேற்று உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கா,பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோ ஆகியோரைச் சந்தித்துப் பேசியுள்ளனர்.

இப்பேச்சுக்களின் போது முப்படைத் தளபதிகள், பொலிஸ்மா அதிபர் மற்றும்உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.(வ)

### வடக்கு கிழக்கு மட்டு...

சகல பகுதிகளுக்கும் கிடைக்கச் செய்யவேண்டியது இன்றியமையாததாகும் என்று கூறிய ஆசிய அபிவிருத்தி வங்கித் தலைவர், சமாதான முயற்சிகளில் விடுதலைப் புலிகள் உறுதியாக உள்ளார்கள் என்றும்,சமாதான முயற்சி ஆரம்பிக்கப்பட்ட ஒரு வருட காலத்தில் சிறப்பான முன்னேற்றம் காணப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (வ)


## பதவி வெற்றிடம்

கணனி இயக்குநர்கள் ஆண்கள்

(இரவுக் கடமை)

Page Maker,Typing தெரிந்தவர்கள் சுயவிபரம் அடங்கிய விண்ணப்பங்களை 10.03.2003க்கு முன்னதாக;

ஆளணி முகாமையாளர்,
'வலம்புரி'
இல.15,வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்

## அறிவித்தல்

தென்பகுதியிலிருந்து எமது பகுதிக்குள் வியாபார நோக்கம் கருதி சிகரட் வகைகள் கொண்டு வருவதற்கு 2003 .03 .15 ஆம் நாளிலிருந்து முகவர்களுக்கு மட்டும் அனுமதி வழங்கப்படும்.

பணிப்பாளர்,
ஆயப்பகுதி,
நிதித்துறை,
தமிழீழ விடுதலைப் புலிகள்.


## விபத்தில் இருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

வெவ்வேறு இடங்களில் ஏற்பட்ட மோட்டார் சைக்கிள் விபத்துக்களில் காயமடைந்து இருவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஆரியகுளம் சந்தியில் நேற்று இடம் பெறற விபத்தில் மானிப்பாயைச்சேர்ந்த சுப்பிரமணியம் (வயது 53) என்பவரும் சங்கானையில் இடம் பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளவாலையைச் சேர்ந்த செல்வராசா (வயது 45) என்பவரும் படுகாயம் அடைந்துள்ளார். (ந-6)

## உதைபந்தாட்டம் இன்று நடை பெறாது

(சுண்டிக்குளி)

யாழ்.மாவட்ட உதைபந்தாட்ட லீக் நடத்தும் 22வயதுக்குட்பட்ட உதைபந்தாட்டப் போட்டியில் இன்று நடைபெறவிருந்த இறுதிப் போட்டி தவிர்க்கமுடியாத காரணத்தினால் நடை பெறமாட்டாது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இறுதிப் போட்டி உரும்பிராய் இந்துக் கல்லூரியில்,உரும்பிராய் றோயல் அணிக்கும் நாவாந்துறை கலைவாணி சன சமூக நிலைய அணிக்குமிடையில் நடை பெற இருந்தது. (ந-110)

## நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் வளர்பிறை சனசமூக நிலையத்தின் மாணவர் மனறம் வெளியிடும் ''இளம் தளிர்'' நூல் வெளியீட்டு விழா இன்று மாலை 3மணிக்கு கோண்டாவில் சி.சி.த.க.பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கோண்டாவில் தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனை கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளர் பொ.ஜேசுராசா கலந்து கொள்ளவுள்ளார். (வ-5)

## ஏச்.என்.டி.ஏக்கு கணக்காளர் அங்கீகாரம்

(யாழ்ப்பாணம்)

உயர் தொழில்நுட்ப நிறுவனங்களில் நான்கு ஆண்டுகள் உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா (ஏச்.என்.டி.ஏ)கற்கை நெறியைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கு லண்டன நிதியியல் கணக்காளர் நிறுவனத்தின் அங்கீகாரம் வழங்கப்படவுள்ளது. (ந-5)

## நெதர்லாந்து நிபுணர்களின் இலவச கண் பரிசோதனை

### இன்றும் நாளையும் மல்லாகத்தில்

(ஏழாலை)

நெதர்லாந்தில் இருந்து யாழ்ப்பாணம் வருகை தரவுள்ள 'எவிடென்ரே' நிறுவன கண் பரிசோதனைக் குழுவின் இலவச கண பரிசோதனை முகாம் இன்றும் நாளையும் முன்னாள் வலி.வடக்கு பிரதேச சபைத் தலைவர் ஸ்ரீ பாஸ்கரனின் மல்லாகம் இல்லத்தில் இடம் பெறவுள்ளது.

மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க ஏற்பாட்டில் இடம் பெறும் இக் கண்பரிசோதனை முகாமில் சிகிச்சை பெறுபவர்களுக்கு பிறிதொரு தினத்தில் கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளன.

இக் குழு உடுவில் வாழ்வகத்திற்குச் சென்று அங்கும் கண்பரிசோதனைகளை மேற் கொள்ளவுள்ளது. (உ-12)

## ''உப்பில் உறைந்த உதிரங்கள்'' நேற்று வெளியிடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் அமைப்பின் கடற் புலி பெண் போராளிகளின் ''உப்பில் உறைந்த உதிரங்கள'' எனும் முழு நீளத் திரைப்படம் வெளியிட்டு வைக்கப்பட்டது.

இவ் வெளியீட்டு விழா மகளிர் தினமான நேற்று யாழ்.பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் பிற்பகல் 4.30மணிக்கு கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் தலைமையில் நடை பெற்றது.

இந் நிகழ்வில் யாழ்.மாவட்ட அரசியல் துறை மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் தமிழினி, அரசியல துறைப் பொறுப்பாளர் சி.இளம் பரிதி மற்றும் போராளிகளான பாவலன்,யமுனா ஆகியோர் கலந்து கொண்டனர்.

திரைப்படத்தின் முதல் பிரதியை போராளி யமுனாவிடமிருந்து யாழ். பல்கலைக் கழக முகாமைத்துவ பீடத்தைச் சேர்ந்த விரிவுரையா ளர் திருமதி சிவாஸ்கரநாதன் பெற்றுக்கொண்டார். (இ-7,4)

## கூட்டம்

(சில்லாலை)

வடலியடைப்பு சைவப்பிரகாச வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10மணிக்கு பாடசாலை மண்டபத்தில் மேற் படி பாடசாலை அதிபர் தலைமை யில் நடை பெறவுள்ளது.(உ-58)

## தீக்காயம்

(யாழ்ப்பாணம்)

தலைப்பகுதியில் பலத்த தீக்காயங்களுடன் குடும்பஸ்தர் ஒருவர் நேற்றிரவு யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அரியாலை திருமகள் வீதியைச் சேர்ந்த இராசையா சிவநேசன் (வயது 35)என்பவரே வைத்திய சாலையில அனுமதிக்கப்பட்டுள்ளவராவார். (இ-6)


## MEDICAL CHECK UP
## வைத்திய பரிசோதனை

நோய் வருமுன் காப்போம்
திடீர் மரணத்தைத் தவிர்ப்போம்

- 40 வயதிற்கு மேற்பட்ட நோய் உள்ள. நோய் அற்ற அனைவரும் இந்த MEDICAL CHECK UP ஐச்செய்வதன் மூலம் நோயற்ற சுகவாழ்வு வாழலாம்
- X-RAY, ECG, சில முக்கிய இரத்தப் பரிசோதனைகள். சிறுநீர்ப்பாசோதனை. இலவச வைத்திய ஆலோசனையுடன் கூடிய MEDICAL CHECK UP குறைந்த கட்டணத்தில்! விபரங்களுக்கு நேரில்!

போக்குவரத்து வசதி கருதி

சம்பந்தர் மொடேர்ன் கிளினிக்

(அமுல் கிறீம் ஹவுஸ் அருகில்)
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

[C/5602]

# கண்டியிலிருந்து யாழ். மக்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்!

வீட்டில் இருந்தே ஆங்கிலம் கற்று, DIPLOMA சான்றிதழ் ஒன்றைப் பெற நீங்கள் தயாரா?

தபால் மூலம் ஆங்கிலப் பாடநெறி - SPOKEN ENGLISH BY POST

சரளமாக ஆங்கிலம் எழுத,பேச,வாசிக்க 90 நாட்களில் பயிற்சி அளிக்கப்படும்

இலவசம்-FREE

பாடநெறியைத் தொடர விண்ணப்பிக்கும் அனைத்து மாணவர்களுக்கும் பின்வருவன இலவசமாக வழங்கப்படும்

* English-Tamil-Dictionary-ஆங்கில தமிழ் அகராதி
* Spoken Sinhala Course-சிங்களப் பேச்சுப் பயிற்சி பாடநெறி
* அழகிய Bag ஒன்று

மேலதிக விபரங்களைத் தபால் மூலம் பெற நீள கடிதவுறையை அனுப்பவும்.

20003 ஆம் ஆண்டுக்கான புதிய மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றார்கள்

மேலதிக விபரங்களை Tele Phone மூலம் பெற அழையுங்கள் 08-201433

(c/5830)

JEFFWOOLAR EDUCATIONAL INSTITUTE P.O.BOX 119-KANDY Tele:08-201433,0777-213181


இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.03.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.